தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக } பார்த்திப—மார்கழி 1945—டிசம்பர் { மலர் கூ

மகிழ்கின்றோம்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வீரத்திரு. A. இலக்குமணசாமி முதலியார் அவர்களை மீண்டும் மூன்றாண்டிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக மாட்சி மிக்க சென்னைக் கவர்னர் அவர்கள் நியமித்துள்ளார்கள் என்பதனைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அறிவாற்றலிற் சிறந்தவரும் பல்கலைக் கழக வளர்ச்சியே தம் குறிக்கோளாகக் கொண்டவரும் பொறுப்புணர்ச்சியிற் றலைமை சான்றவரும் ஆகிய வீரத்திரு பேரறிஞர் A. இலக்குமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகம் மேலுஞ் சிறந்தோங்குதற்கு ஒரு வாய்ப்பளிக்குமா போலச் சென்னைக் கவர்னர் அவர்கள் முதலியாரை நியமித்ததைக் கண்டு மகிழ்ந்து கவர்னர் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

இங்ஙனமே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராயிருந்து தொண்டாற்றிச் சிறப்பித்த பேரறிஞர் வீரத்திரு M. இரத்தினசாமி அவர்களை மீண்டும் மூன்றாண்டிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகக் கவர்னரவர்கள் நியமித்துள்ளதைக் கண்டு மகிழ்ந்து மிகுதியும் பாராட்டுகின்றோம். இவர் தலைமை ஏற்ற பின் பல்கலைக் கழகத்தில் ஒழுங்கு முறையை நிலைநாட்டிப் பல்கலைக் கழகத்தின் சிறப்பைப் பாங்குற நிறுவியுள்ளார். பல்கலைக் கழகத்தின் சார்பில் தொழிற்கல்வி சிறந்தோங்கப் பாங்குறப் பணிபுரிந்துள்ளார். இவர் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மேலுஞ் சிறந்தோங்கித் தமிழ் நாட்டிற்குப் புகழளிக்குமென எண்ணுகின்றோம். இவ்விருவரும் மேலுஞ் சிறந்தோங்கிப் புகழ் கொள்ள வேண்டித் தமிழ் அன்னையைத் வணங்கி வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

கரந்தைப் புலவர் கல்லூரி வேண்டுகோள் !

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கச் சார்பில் தமிழவேள். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் முயற்சியால் நாட்டப்பெற்ற "**கரந்தைப் புலவர்கல்லூரி**"யின் வளர்ச்சி கருதித் தமிழ்நாட்டிலுள்ள செல்வர்கள் தத்தமாலியன்ற பொருள் உதவிபுரிய வேண்டுமென வேண்டிக் கொள்ளுகின்றேன். காலஞ்சென்ற தலைவர்கள் **சர், ஏ. டி. பன்னீர்ச்செல்வம்**, தமிழவேள் **த. வே. உமாமகேசுவரம் பிள்ளை** ஆகிய இருவரின் நினைவுக் குறியாய் நின்றிலங்குவது இக்கரந்தைப் புலவர் கல்லூரியாகும். இக்கல்லூரியைத் தமிழர்கள் கண்ணெனப்போற்றி வளர்க்கும் கடப்பாடுடையவர்கள். இக்கல்லூரி பொருள் முட்டுப் பாட்டால் செய்யவேண்டிய தொண்டுகளைச் செவ்வனே ஆற்றுதற்கு வாய்ப்பின்றித் தயங்குகின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சி கருதி ஆங்காங்கே பொருள் திரட்ட வரும் நம் சங்க அன்பர்களிடம் பொரு ளளித்து உதவும் வண்ணம் தமிழர்களை மிகப்பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

ஐ. குமாரசாமி பிள்ளை,

கல்லூரித் தாளாளர்.

அறிவிப்பு.

தமிழ்நாடு நாடகக்கலை மூன்றுவதுமாநாடு சென்னை.

இம்மாநாடு கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவரும் முத்தமிழ் வள்ளலும், தஞ்சை நகரமன்றத் தலைவரும் ஆகிய திருவாளர். இராவுபகதூர், **A. Y. அருளாநந்தசாமி நாடார்** அவர்கள் தலைமையில் 1945-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் சென்னையில் நிகழ இருக்கின்றது. வரவேற்புக் கழகத் தலைவராக நாடகப்பேராசிரியர் இராவுபகதூர், ப. சம்பந்த முதலியார் அவர்கள் அமைந்து பணியாற்றுகின்றார்கள். நாடகத் தமிழ் அன்பர்கள் தமிழ் நாடகக் கலைவளர்ச்சிக்குத் தத்தமாலியன்ற உதவிபுரிந்து ஆதரித்தருள வேண்டிக்கொள்ளுகின்றேம்.

சைவ சித்தாந்த சமாஜத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் அதை யொட்டிய சைவர் மாநாடும் சிவகாசி நாடார் பெண் பாடசாலைக்கு அணித்தே அமைத்துள்ள கொட்டகையில் நிகழ் பார்த்திப, மார்கழி, 9, 10, 11 1945-டிசம்பர் 23, 24, 25-ஆம் நாட்களில் நடைபெறும்.

செய்யுட் கடிதங்கள்

மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், திருச்சி வானொலியில் பேசியது.

தமிழ் நாட்டில் பண்டைக் காலந் தொட்டுக் கவி பாடும் ஆற்றல் வாய்ந்த புலவர் பெருமக்கள் உலகியற் செய்திகளைப் பற்றியும் தத்தம் குடும்பச் செய்திகளைக் குறித்தும் அரசர்கள் செல்வர்கள், மற்றைப் புலவர்கள் என்னும் இவர்களுக்கு உரை நடையில் அன்றி விளக்க மாகச் செய்யுள் வடிவிலும் ஓலை, அல்லது கடிதம் எழுதுதலை வழக்க மாக மேற்கொண்டிருந்தனர். இதனை 'ஓலைத்தூக்கு' என்று நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். தூக்கு என்பதற்குப் பொருள் செய்யுளாகும். ஆகவே 'ஓலைத்தூக்கு' என்பது ஓலைப்பாட்டு, அல்லது கடிதச் செய்யுள் என்றாகும். இச் செய்யுட் கடிதத்தை அனுப்புவோர் அனுப்பப்படுவோரினும் பெரியவராக இருப்பின் அப்பொழுது அது 'திருமுகப் பாசுரம்' என்றும் பெயர் பெறும். இப்பொழுது வழங்கும் காகித நிலையில் பழங் காலத்தில் பனையோலை இருந்தமையால் 'ஓலைத்தூக்கு' என்று வழங்கப்பட்டது. செய்யுள் வடிவில் கடிதம் எழுதுதலைக் கடவுளும் மேற்கொண்டிருந்தனர் என்பது தமிழ் மரபு. பற்பல சந்தர்ப்பங்களில் தம் அன்பர் பொருட்டுச் சிவபெருமான் செய்யுள் வடிவில் கடிதம் எழுதியதாகக் கதைகளிற் கேட்கின்றோம். தமிழ்ப் பெருங்காப்பியங்களிலும் இச் செய்யுட் கடிதங்கள் பல காணப்படுகின்றன. பிற்காலத்தே தமிழ் நாட்டுச் சிற்றரசர்களின் அவைக்களங்களில் இருந்த புலவர்கள் தம் பெருமைகளைப் பலவாறு விரித்தும் தமக்கு வேண்டியவைகள் இன்னவென்று குறிப்பிட்டும் செய்யுட் கடிதம் எழுதியுள்ளார் என்பதற்குச் சான்றாகப் பல கவிதைகளைக் காணலாம். வகைக்கு ஒவ்வொன்று காட்டலாம் என்று எண்ணுகிறேன்.

மதுரையில் சிவ பக்தியிற் சிறந்து விளங்கிய பாண பத்திரர் என்பார் வேறொன்றையுங் கருதாமல் சிவபெருமானையே மனமுருக யாழிசையோடு பாடிக் கொண்டிருக்கும் நாளில் அவர்க்கு நேர்ந்த வறுமைத் துன்பத்தைப் போக்கக் கருதிய இறைவன் சேர அரசற்கு ஒரு செய்யுட் கடிதம் எழுதி, அப் பாணபத்திரரிடம் கொடுத்து 'இதனைச் சேர்ப்பித்துப் பொருள் பெற்று வறுமைகளைக' என்று அருளிச் செய்தனராக அக் கட்டளைப்படியே பாணபத்திரர் நடந்து கொண்டார் என்பது வரலாறு. அப்படிக் கொடுக்கப்பட்ட பாடல் "திருமுகப் பாசுரம்" என்னும் பெயரால் சைவத்திரு முறைகளுள் ஒன்றாகிய பதினோராந் திருமுறையில் திருவாலவாயுடையார் அருளிச் செய்ததாக முதற்கண் உள்ளது. அப்பாசுரம் வருமாறு :—

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச் சிறகு

அன்னம் பயில் பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன் யான் மொழி தரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண் பால் யாழ் பயில் பாண பத்திரன்
தன் போல் என் பால் அன்பன் தன் பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

என்பதாம். இப் பாசுரத்தில் எழுதினவர் பெயர் ஏற்றுக் கொள்வோரின் பெயர் கொண்டு செல்வோரின் பெயர் அவர் விரும்பும் பயன் ஆகிய இச்செய்திகள் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இங்ஙனமே தில்லைத் திருச்சிற்றம்பல முடைய இறைவன் பெத்தான் சாம்பான் என்பவருக்கு முத்தி நிலைக்குரிய தகுதியைக் கொடுக்கும்படி சைவ சமய ஆசாரியருள் ஒருவராகிய கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியாருக்கு அனுப்பியதாகத் திருமுகப் பாசுரம் மற்றொன்றும் உளது. அது வருமாறு :—

அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை.

என்பதாம். இதன் கண் இறைவன் தம்மை அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் என ஒருமையாகவும் தம் அடியாருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியரைக் கொற்றங் குடியார் எனப் பன்மையாகச் சிறப்பித்தும் கூறியிருத்தல் நினைக்கத் தக்கது. இதனால் கடிதம் எழுதுவோர் தம்மினும் எழுதப்படுவோரை உயர்த்துக் கூறுதல் மரபென்பது புலனாதலறிக. இதுவே இன்றும் பெரியார் மேற்கொள்ளும் நெறியாகும். இதற்கு மாறாகப் பிற்காலப் புலவர்களுடைய சீட்டுக் கவிகளில் எழுதப் படுவோரினும் எழுதும் புலவர் தம் பெருமையை மிக்க ஆரவாரத்தோடு சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். இது பொருந்துமா வென்பதைப் பின்னர்க் கூறுவேன். அதற்கு இடையில் தமிழ்ப் பெருங் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியவற்றில் கடித முறையாக எழுதப்பட்ட செய்யுட்களைப் பற்றிச் சில தெரிவிக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் அக் காப்பியங்களில் கடித முறையாக எழுதப் பட்டனவெல்லாம் செய்யுள் நடையாக இன்றி வேறு வகையாக எழுத இயலாதாதலின் செய்யுட் கடிதம் என்பதற்குச் சிறப்பு முறையில் பொருந்தாதென்று கண்டு அவற்றில் தலைப்பட்டிலேன். ஆயினும் பெருங் காப்பிய ஆசிரியர் இத்துறையிற் செல்லும் நெறிகளை அறிந்து இன்புறுதற்கு எடுத்துக் காட்டாக பெருங் கதையில் ஒன்று கூறத் துணிகின்றேன்.

பெருங்கதையென்னும் பெருங்காப் பியத்தில் கடித முகமாக எழுந்த செய்யுள் பகுதிகள் பல சந்தர்ப்பங்களில் உள்ளன. அவற்றுள் மானனீகை என்னும் பணிப் பெண்ணை உதயணன் கண்டு காமுற்ற நிலையில் அவனுக்கும் அவளுக்கும் நிகழ்ந்த கடிதப் போக்கு வரத்துக்கள் மிகவும் சுவை பயந்து நிற்பன. மானனீகை என்பாள் அழகும், இளமையும் ஒருங்கு வாய்ந்தவள். உதயணன் தன் பகையரசனை வென்றபோது அம் மனனீகையைக் கொணர்ந்து தன் தேவியாகிய வாசவதத்தைக்குக் கோலம் புனையும் வண்ண மகளாக்கினுன். அவள் வனப்பிலீடுபட்ட உதயணன் தன் காதற் குறிப்பைத் தன் தேவி யறியாதவாறு எவ்வழியாகவேனும் அவளுக்கு அறிவிக்க முயன்று கொண்டிருக்கும்போது மானனீகையால் கோலஞ் செய்யப்பட்ட வாசவதத்தை அவ்வலங்காரத் திறமையைக் காட்ட உதயணன் பால் வந்தாள். அவளைக் கண்ட உதயணன் மானனீகையின் அலங்காரம் சிறந்ததாக இல்லை என்றும் சிறந்த முறையில் கோலம் செய்யும் திறமை தனக்குண்டென்றும், அவள் நெற்றியையே கடிதமாகக் கொண்டு மானனீகை பயின்ற யவன மொழியில் தன் காதற் குறிப்பை எழுதலானுன். எழுதுதற்குரிய மை பூந்துகளோடு கூடிய சந்தனக் கலவையானதால் மஞ்சள் நிறமுள்ள அக் கலவை அவர் தம் மணமங்கலத்திற்கு ஏற்றதாயிற்று. அங்ஙனம் எழுதிய காதற் பாசுரம் வருமாறு:—

ஓடியா விழுச்சி ருதயண னேலை
கொடியேற் மருங்குற் குயின்மொழிச் செவ்வாய்
மானனீகை காண்க சேனுயர்
மாட மீமிசை மயிலிறை கொண்டென
ஆடன் மகளிரொ டமர்ந்தொருங் கீண்டி
முந்துபந் தெறிந்தோர் முறைமையிற் பிழையாப்
பந்து விளையாட்டினுட் பாவை தன் முகத்துச்
சிந்தரி நெடுங்க ணென்னெஞ்சகங் கிழிப்பக்
கொந்தழற் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்
ஆற்றேனவ் வழலவிக்கு மா மருந்து
கோற்றேன் கிளவி தன் குவி முகையாகும்
பந்தடி தானுறப் பறையடி யுற்றவென்
சிந்தையு நிலையுஞ் செப்புதற் கரிது

என்பதாம். இதன் கண் அவள் பந்தடிக்குந் தோறும் தன் நெஞ்சம் பறையடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டதும் தான் நினைத்தபடி தன் எண்ணங்களை யெல்லாம் குறைவற எழுதுதற்கு நெற்றியாகிய கடிதம் இடந்தராமையால் சுருக்கமாகக் கூறியது கொண்டு எனக்கு அருள்ல் வேண்டும் எனக் கூறியதும் பாராட்டத்தக்கன. இங்ஙனம் எழுதி இவ் அலங்காரத்தை மான நீகைக்குக் காட்டென விடுக்க அவ் வாசகப் பொருள் உணர்ந்த மான நீகை மற்றுநாட் காலை அப்பெருந் தேவியை மிகவும் சிறந்த முறையில் அலங்கரிப்பதாகக் கூறி முன் அவன் எழுதிய யவன மொழியிலே தன் இணக்கம் இன்மையை எழுதி இக் கோலத்தை உதயணனுக்குக் காட்டுக என மீண்டும் வாசவதத்தை

யின் நெற்றியில் வற்புறுத்தி எழுதி அவள் இணக்கத்தைப் பெற்று மணஞ் செய்து கொண்டான் என்பர். இந்நிகழ்ச்சியில் உதயணன் வண்ணமகளாகிய ஒருபெண்ணிற்கும் தனக்குமுள்ள காதற் கருத்துக்களை எழுதித் தெரிவித்துக் கொள்ளுதற்குத் தன் பட்டத்து அரசியாகிய வாசவதத்தையின் நெற்றியையே எழுதுங் கடிதமாக அமைத்துக் கொண்டது மிகவும் பாராட்டத் தக்கது. வாசவதத்தையின் திரு முகத்தையே கடிதமாகக் கொண்டமையால், கடிதச் செய்யுளைத் திருமுகப் பாசுரம் என்று கூறுதற்கு இந் நிகழ்ச்சி மிகவும் பொருத்தமுடையதாயிற்று.

இனிப் பிற்காலத்துப் புலவருள்ளே இராமநாதபுரம் சமஸ்தான வித்வானுக விளங்கிய அட்டாவதானம் சரவணப் பெருமாட்கவிராயர், அவர் வழித் தோன்றல்கள், பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர், சென்னி குளம் அண்ணுமலை ரெட்டியார் முதலியோர் அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் பற்பல சந்தர்ப்பங்களில் செய்யுட் கடிதங்கள் பல எழுதியிருக்கின்றனர். அவற்றைச் சீட்டுக் கவியென்று வழங்குவர். இங்கே குறிப்பிட்ட புலவருள்ளே அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் இத்துறையில் தலை சிறந்தவரென்னலாம். இவர் செய்யுட்களில் ஒன்று பின் வருவது,

ஜெய ராமநாதனே தெய்வந் தனுக்கோடி
 தீர்த்தமே தீர்த்த மெங்கள்
சேதுபதியே ராஜன் என்னும் தொடக்கமுடைய பாட்டில்,

நய மதுரமறியாத முழுமடையர் செவியெனு
 நல்ல பாம்புப் புற்றிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
 நாளுங் கவித்திடாதோன்

நாவலந்தீவினுள் நாடெலாம் புகழ் பெறு
 நராதிபர் வணங்கு துல்யன்
நாவலர் குழாம் பல துதிக்கும் அட்டாவதா
 னப் பிரபவ சார்வபூமான்
இயலா யிரங் கோடி பிரபந்த முழுதுமோ
 ரிமைப் பொழுதினிற் பாடுவோன்
இலக்கண சமுத்திரஞ் சோமசுந்தர குருவெ
 னையனடிமைக்கு மடிமை
ஏக சக்ராதிபதி சரவணப் பெருமாட்க
 விச்சுரன் செங்கையோலை
இந்திர தருயாழ்ப்பாண மேவிய வயித்யலிங்
 கேந்திர னெதிர் கொண்டு காண்க
வயமான கையிலே மூக்குள்ளதொன்று திரு
 மாயன் பிறப்பிலொன்று
வாற்புறமோர் கொம்புந் தலைப்புறமோர் கொம்புமுள
 வாகனந் தன்னிலொன்று

வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று
வாரமது தன்னிலொன்று
வரவுடன் வெளுத்த சந்திரனென்று நீயின்ன
வரிசை தந்தருள் புரிவையே

இக் கடிதச் செய்யுளில் தம்மை ஆதரித்த சேது வேந்தரிடத்துத் தமக்குள்ள அன்பை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கவிச்சுவை யறியாதவர் முன்னிலையில் இனிய தமிழ் வளங் கொழிக்குஞ் செய்யுட்களைப் பாடிக் காட்டுவதில் அவர்க்குள்ள வெறுப்பை,

நய மதுரமறியாத முழுமடையர் செவியென்னும்
நல்ல பாம்பு புற்றிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளுங் கவித்திடாதோன்

என்று தம்மைக் கூறிக் கொண்டதனால் அறியலாம். இது மிகவும் பாராட்டத்தக்கது. 'செவியென்னும் நல்ல பாம்புப் புற்று' என்றதனால் கவிச்சுவை யறியாதார் செவிகளில் ஏறத்தக்கன பாம்பின் நஞ்சைப் போன்ற கொடுஞ் சொற்களே யென்பது விளங்கும். மேலும் இத்துணை வீறு படைத்த புலவர் தமக்குக் கல்வி யறிவுறுத்த சோம சுந்தர குருவின் பால் மிகுதியான பணிவும் அன்பும் வைத்திருப்பது பாராட்டத்தக்கது. இதற்குச் சான்று 'இலக்கண சமுத்திரம் சோம சுந்தர குருவென் ஐயனடிமைக்கும் அடிமை' என்னும் பகுதியாகும். இத்தகைய சீட்டுக் கவி மூலம் யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம் என்னும் செல்வரிடத்து இவர் தமக்கு வேண்டியபொருளைக் குறிப்பிட்டிருப்பது வியக்கத் தக்கது. அப்பொருள்களாவன :— வயமான கையிலே மூக்குள்ளதொன்று என்றதனால் துதிக்கையிலே மூக்குடைய யானை யென்பதும், மாயன் பிறப்பிலொன்று என்றதனால் குதிரை யென்பதும், வாற்புறமோர் கொம்பும் தலைப்புறமோர் கொம்புமுள வாகனம் என்றதனால் இரு புறமும் தாங்குங் கொம்புகளையுடைய பல்லக்கு என்பதும், வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று என்றதனால் பரமசிவன் திரிபுரத்தைச் சிரிப்பினால் எரித்தார் என்னும் புராணக் கதையுண்மையாலும் சிரிப்பிற்கு நகையென்னும் பெயருண்மையானும் ஆபரணம் என்பதும், வாரமது தன்னிலொன்று என்பதனால் வெள்ளி வெண் பொற்காசு என்பதும், வெளுத்த சந்திரன் என்றதனால் சந்திரன் கலையாதலின் வெண்மை நிறமுடைய ஆடை யென்பதும் ஆகும். யானை குதிரை பல்லக்கு முதலியன அரசர்க் குரியனவாதலால் அவ்வியைபு பற்றியே இக் கவிராயர் தம்மை 'ஏக சக்ராதிபதி, சரவணப் பெருமாட்கவீச்சுரன்' என்று கூறிக் கொண்டார் போலும். இங்ஙனம் இவரும் மற்றைய புலவரும் தம் பெருமைகளை மிகுதியாக வெளிப்படுத்திக் கொள்ளுதற்குப் பவணந்தி என்னும் மற்றொரு புலவர் தற்புகழ்ச்சி செய்து கொள்ளலாகாது என்பதற்கு மறுதலை விதியாக ஒரு விதி கூறியுள்ளார். அது 'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே' என்பதாம்.

இங்கே கூறப்பட்ட புலவர்களின் காலத்துக்கு மிகவும் பிற்பட்டவராகிய சென்னி குளம் அண்ணுமலை ரெட்டியார் கடிதப் பாடல்கள் மேற் குறிப்பிட்ட ஆடம்பரங்களில்லாமல் தெளிவான இனிய நடையில் அமைந்தனவாகும். அவரை யாதரித்த ஊற்றுமலை ஜெமீன்தாருக்கு அவரெழுதிய கடிதச் செய்யுட்களில் ஒன்று பின் வருவது :—

ஆதியிலக் கணப்படியே யுதித்திரண்டிற் கடங்காத் துன்பாக்கி மூன்றை
மேதினியில் பலவிதமாச் செலவு செயுமாறு புரிவித்த நாலிற்
பாதியினுல் யான்பட்ட பாடுசொல முடியாது பஞ்சமென்ப
தேதுமில்லை யோதுமில்லை யிகந்து தெரு வுலவுதற்கும் ஏதுவில்லை

இச் செய்யுட்கு முன்னுள்ள பாடலால் அப்புலவர் ஊற்று மலையில் ஜெமீன்தாரவர்களைக் கண்டு தம் இனிய கவிகளைப் பாடிக் காட்டி விட்டுத் தம் சொந்த ஊர்க்குச் சென்றதைக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் தாம் சொந்த ஊரில் இருக்குங்கால் தம் உடலுக்கு நேர்ந்த நோய்த் துன்பத்தைப் பற்றியும் அதன் பொருட்டு நேர்ந்த பொருட்செலவு முதலியவற்றைக் குறித்தும் குறிப்பிற் புலப்பட வைத்து எழுதிய செய்திகள் விசித்திரமாக அமைந்து படிப்பவர்க்கு இன்பஞ் செய்வனவாம். இதன்கண் ஐந்திலக்கணங்களையும் முறையே குறிப்பிட்டு அக் குறிப்பினுல் தமக்கு நேர்ந்த துன்பத்தைப் புலப் படுத்தியுள்ளார்.

ஆதி யிலக்கணபடியே உதித்து என்றதனுல் முதல் இலக்கணம் எழுத்தாதலின் தலை யெழுத்துப்படி தமக்கு நோய் தோன்றியது என்பதும், இரண்டிற்கு அடங்காத் துன்பாக்கி என்றதனுல் இரண் டாம் இலக்கணம் சொல்லாதலின் அந்நோய் சொல்லிற் கடங்காத் துன்பத்தை உண்டாக்கிற்று என்பதும், 'மூன்றை மேதினியிற் பல விதமாச் செலவு செய்யுமாறு புரிவித்து' என்றதனுல் மூன்று மிலக்கணம் பொருளாதலின் கையிலுள்ள பொருளைப் பலவிதமாகச் செலவிடச் செய்ததென்பதும் அத்தகைய நோய் தான் யாதெனின் 'நாலிற் பாதி' என்பதனுல் நான்காம் இலக்கணம் யாப்பாதலானும் பாதி யென்பது அரையாதலானும் அதனுல் அறியலாம் என்பதும், பஞ்சம் ஏதுமில்லை என்பதால் ஐந்தா மிலக்கணம் அணியாதலின் உடலின் அழகு குன்றி விட்டதென்பதும் பெறப்பட வைத்தது பாராட்டத்தக்கது. இங்ஙனம் செய்யுட் கடிதங்களின் இயல்பு ஒருவாறு கூறப்பட்டது.

திருக்குறட் சிறப்பு

திரு. ப. பழநிமுதலியார், தமிழ்விரிவுரையாளர், கரந்தை.

(முற்றொடர்ச்சி: துணர் உக, மலர் அ, பக்கம் 215.)

யானை :—

யானையைப் பிடிப்பவர்கள் கையாளும் முறைகள் பல. ஒரு யானையை மற்றொரு பழகிய யானையைக் கொண்டு பிடித்தலுண்டு. இதனை ஆசிரியர் ஒரு வினையால் மற்றொரு வினையை முடித்துக் கோடற்கு உவமையாகக் கூறுகின்றார். யானையும் யானையும் இழே போரிட்டுக் கொண்டிருப்பதை மலைமேலிருந்து வருத்தமின்றிக் கண்டு களித்தலுண்டு. இந்நிகழ்ச்சி பொருளுடையவன் பலரையேவி, தன் காரியத்தை முடித்துக்கொண்டு இனி திருத்தற்கு உவமையாகக் கூறப் பட்டுள்ளது.

மானம் என்ற அதிகாரம் தமிழருடைய சிறந்த உள்ளப் பண்பைக் காட்டுகின்றது. "இன்றியமையாச் சிறப்பினவாயினும் குன்ற வருப விடல்" உயிர் போவதாயிருந்தாலும்கூட மானங்கெடும் காரியங்களைச் செய்யமாட்டார்கள். "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை...... பீடழிய வந்த விடத்து" என்றுளங் கொண்டிருந்தனர் தமிழ் மக்கள். ஈன்றாள் பசி கண்டபோதுங்கூட, சான்றோர் பழிக்கும் வினைசெய்யற்க எனக் கூறியிருப்பதும், ஆவிற்கே யாயினும் நீர் தா என்றிரந்த விடத்து நாவிற்கு இழிவு தருவது அக் கேட்டலைப்போல் வேறொன்றில்லை என்று கூறியதும் தமிழரின் உள்ள உயர்வைக் காட்டுகின்றது. அவர்களுடைய வீரமோ பிற நாட்டவர் போற்றத்தகும் முறையிலிருந்தது. மறன் இழுக்கா மானமுடையராகத் தமிழரசரும், தமிழ்க் குடிகளும் வாழ்ந்தனர். புறங் காட்டுவதை மட்டும் அவர்கள் வீரத்தின் வழுவியதாக நினைத்தாரல்லர். ஒருவன் வேல் கொண்டெறியும்போது எதிர்த்தவன் கண் இமைப்பானாயின் அவன் அஞ்சினான் என்று கருதி அவனோடு போர் செய்தற்கு விரும்பார் எனின் அவர் தம் வீரத்திற்கு இனியுஞ் சான்று வேண்டுங்கொல்! போரிடைப் படையின்றித் தனித்திருப்பாராயினும், புறமுதுகு காட்டி ஓட நினைத்தனராயினும் அவரோடு பொருதலைச் செய்யார். இஞ்ஞான்று வீரர்களெல்லாம் போர் நின்று விடுமாயின் மகிழ்வர். அஞ்ஞான்றைய வீரர்களோ போருக்கு அரசன் ஏவாவிடின் அவன் மேற் செற்றங் கொள்வர். "உறின் உயிரஞ்சா மறவர் இறைவன் செறினுஞ் சீர் குன்றல் இலர்"

ஒவ்வொருவரைப் பற்றியுஞ் சொல்லப் புகுந்தால் அவர்க்குரிய இலக்கணங்களைத் தெளிவாகக் கூறுவார். அரசரைப்பற்றிச் சொல்லும்போது காரியங்களில் விரைவுடைமையும், அறிதற்கேற்ற கல்வியுடைமையும், காரியம் முடித்தற்கேற்ற துணிவுடைமையும், தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி, அறனல்லவை நாட்டின்கண் நிகழாமற் காத்து வீரத்தின் வழுவாத தாழ்வின்மையுடையவனே அரசனாவன். இதனைப்போலவே அமைச்சனுக் கிலக்கணங்

கூறுங்காலும் 'கருவியுங் காலமும் செய்கையும்' 'வன்கண் குடி காத்தல் கற்றறிதல்' 'பிரித்தலும் பேணிக் கொளலும்' 'ஒற்றனுக் கிலக்கணங் கூறும்போது 'வினை செய்வார் தம் சுற்றம்' 'கடா உருவொடு கண்ணஞ் சாது' 'துறந்தார் படிவத்தராகி என்றும்' 'மறைந்தவை கேட்கவற்றாகி' என்றும் மிகத் தெளிய இலக்கணங் கூறுவர்.

அரசன் நீதி வழங்கும் முறையை 'ஓர்ந்து கண்ணோடாது...... முறை' என்றும், 'கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்......... வேண்டுபவர்' என்றுங் கூறியிருப்பது தண்டிக்கும் முறைமையை மிக அழகாகப் புலப்படுத்துகின்றது. தண்டிக்கும் முறையை மூன்று வகையுள் அடக்கிக் கூறுகின்றார். துன்பஞ் செய்தல், பொருட் கோடல், கோறல். இம் மூவகைத் தண்டனையும் இஞ்ஞான்றும் அரசாங்கத்தாரால் மேற்கொள்ளப் படுகின்றன. கொலைத் தண்டனை கூடாதென்பர் இக்காலத்தார் சிலர். ஆனால் ஆசிரியர் வள்ளுவரோ 'கொலையிற் கொடியாரை......களைகட்டதனொடு நேர்' எனக் கூறுகின்றார்.

நாயனார் எள்ளுதலாகவுஞ் சில சொல்லுகின்றார். பெரியோர் களுடைய நட்பு பிரியுங் காலை இவரை எஞ்ஞான்று கூடுவேம் என்று நினைக்குமாறு செய்து விடும். ஆதலின் பெரியோர்களோடு நட்புச் செய்து பிரிதலென்பது மிகத் துன்பம் பயப்பதொன்று. கீழோருடைய நட்பு முழுமதி குறைந்து கொண்டு வருதல் போல நாடோறுங் குறைந்து கொண்டு வருவதாதலின் பிரியுங்காலைத் துன்பம் பயக்காது. இதனைக் கேலி செய்து சொல்லுகின்றார். ஐயா! பெரியோர்களுடைய நட்பைப் போலல்ல கீழோர்களிடஞ் செய்து கொள்ளும் நட்பு. பிரியுங்காலைச் சிறிதுந் துன்பந் தருவதில்லை. ஆதலின் அந்நட்பு மிக இனியதொன்று என்கின்றார். மேலும் நல்லோர்கள் தாம் நல்லன செய்து கொண்டே இருக்கவும் மிகுதியாகச் செய்யவில்லையே எனவும், செய்வனவற்றுள் குறைபாடுகள் மிகுந்து பாவம் பழி நேருமோ எனவுங் கவலை எய்துவர். கீழோயினரோ அது பற்றிச் சிறிதுங் கவலை யடையாது தீயன செய்துகொண்டே யிருக்கவும் இறுமாந்திருப்பர். ஆகையால் கவலையுடைய நல்லோரைக் காட்டிலும், கவலையின்றி வாழும் இக் கயவர் மிக நன்மையுடையவராவர் என்னுங் கருத்துப்பட 'நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்' என்றும் கயவர் தம் நினைத்தபடி செய்வர். தேவருந் தம்மை நியமிப்பாரில்லாத படி யினாலே நினைத்தவா றொழுகுவர். இவ் வகைப் பண்பால் கயவர் தேவ ரனையர் என்றும் கூறிக் கேலி செய்கின்றார்.

பகைவருடைய மெய் வணக்கங் கண்டும் நம்பற்க. அவர் சொல் வணக்கமோ வில் வணக்கத்தை ஒத்தது. வில் வளைந்தால் பின் அம்பெய்தற்குக் காரணமாதல் போல, அவர்களுடைய சொல் வணக்கமும் நமக்குத் தீங்கு குறித்ததே யாகுமென்றும், அவர்கள் கும்பிடும் கையிலும் ஆயுதம் மறைந்து நிற்கும அவர்கள் அழுகின்ற கண்ணீரும் அத்தன்மைத்து என்றும் கூறி வாள்போல வெளிப்பட்டு

நிற்கும் பகைவரை அஞ்சற்க; அவர்களால் வருங் கெடுதியொன்றில்லை. உட்பகைவர்களோ நம் உடன் கலந்திருந்தே, வனையுங் கருவிகளோடு உடன் கலந்தே இருந்து அக்கலத்தை அறுத்து விடுங் கருவிபோல நம்மைத் தொலைத்து விடுவர். பட்டடை தாங்குவது போன்றிருந்து சமயம் வரும்போது சம்மட்டியால் நன்ருக அடிபடுதற்கு இடனுண்டாக்கிக் கொடுத்தல் போல, துன்பம் வாரா முன்னெல்லாந் தாங்குவார் போன்றிருந்து வந்த விடத்துத் தொலைத்து விடுவர் என உட்பகைஞர் இயல்பு கூறுகின்ருர். அவரைத் தொலைக்கும் விதத்தையுங் கூறுகின்ருர். அப்படிப்பட்ட பகைவரைக் கண்டால் பணிந்திரு, அவர் தாம் தம்மைக் காத்துக் கொள்ளுதலினின்றும் நழுவ விட்டுவிடுவர். காலம் வரும்போது தலையிலிருந்த மூட்டையைத் தள்ளினுல் தலைகீழாய் விழுவது போல நம்மால் நசுக்குண்டு தொலைவர் என்கின்ருர்.

பெண்ணின் பெருமையை ஆசிரியர் 'ஒருமை மகளிரே போலப் பெருமையுந் தன்னைத்தான்' ... எனவும், பெண்ணிற் பெருந்தக்க யாவுள... பெறின் என்றுங் கூறியுள்ளார். 'நாணமும் அச்சமும் வேண்டும் எனில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்' என்று கூறுகின்ருர் பாரதிதாசன். நம் அருமைத் திருவள்ளுவர் கருத்தை நோக்குவோம். 'கருமத்தால் நாணுதல் நாணு' ஒழிந்த மன மொழி மெய்களது ஒடுக்கத்தான் வருவன குலமகளிர் நாணமாகும் எனக் கூறுகின்ருர். 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே' என்று தொல்காப்பியங் கூறுகின்றது. இதனையே நம் தமிழ் மறையும் 'நாணுல் உயிரைத் துறப்பர்......நாண் ஆள்பவர்' எனக் கூறுகின்றது.

விளையாட்டாக ஒருவரை ஒருவர் இகழ்ந்து கொள்ளுகின்ருேம். அதுபோலவே பகைத்துக் கொள்கின்ருேம். இரண்டும் மிகக் கொடியது என்று கண்டிக்கின்ருர். 'நகையுள்ளும் இன்னு திகழ்ச்சி... பாடறிவார் மாட்டு' 'பகை யென்னும் பண்பிலதனை......வேண்டற்பாற்றன்று' என்னும் குறள்களால் தெளியலாம்.

உழவுத் தொழிலைப்பற்றி மிக நுட்பமான ஆராய்ச்சி உரைகளை வழங்குகின்ருர். 'உண்டி முதற்றே உணவின் பிண்டமாகலின்' அவ் வுண்டியைத் தருவதாய உழவுத் தொழிலைச் செய்யும் உழவரை 'உழுவார் உலகத்தார்க்காணி அஃதாற்ருது' என்று சிறப்பித்துச் சொல்லுகின்ருர். உழுங்கால் எவ்வாறு உழ வேண்டும் என்பதை விளக்குமிடத்து 'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்... சாலப்படும்' எனக் கூறியுள்ளார். அப்புழுதி அவ்வளவு நுண்ணிதாக ஆகும்படிப் பல தடவை உழவேண்டும் என்கின்ருர். உழவுத்தொழிலிலே கவனிக்க வேண்டியன 5. ஏருழதல், எருவிடுதல், களைகட்டல், நீர்கால் யாத்தல், வயலைச் சென்று நாடோறும் பார்த்து வருதல். இவ்வைந்தினையும் 'ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்ட பின் நீரினும் நன்றதன் காப்பு' எனக் கூறுகின்ருர். எல்லாஞ் செய்தாலும் நிலத்தை நாடோறுஞ் சென்று பார்க்காவிட்டால் பயனில்லை என்பதை 'செல்லான் கிழவன் இருப்பின்......ஊடிவிடும்' என்னும் மிக அழகான உவமையால் விளக்குகின்ருர்.

இசைப்பகுதியாக இந்நூலுள் காணப்படுவன 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்......கேளாதவர்' என்றும் 'பண்ணென்னும் பாடற்கியை பின்றேல்......கண்' என்றும் வந்துள்ளனவாகும். ஒரு துணியைத் திரையாகக் கட்டி அதனுள்ளிருந்து பொம்மையை ஆட்டுவதுண்டு. அது பொம்மலாட்டம் எனப் பெயர் பெறும். அதனையும் ஆசிரியர் குறிக்கின்றார். 'நாணகத்தில்லார் இயக்கம் மரப்பாவை நாணால்......உயிர் மருட்டியற்று என்றும், இரப்பாரை இல்லாயின்..............மரப்பாவை சென்று வந்தற்று' என்றும் வருவனவற்றால் உணரலாம். 'கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம்' என்பதனால் கூத்துப் பகுதியும் விளங்குகின்றது.

இனிமேல் இன்பப் பகுதியை நோக்குவோம். தலைவன் நெடுநாள் பிரிந்திருந்தான். பின்னர் வந்தான். தோழியானவள் தலைவன் வந்தானாதலினாலே நீயும் பிரிவாற்றாமையால் வந்ததுன்பம் தீர்ந்து நின் கண்களுந் துயில்வனவாதல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைவியானவள் 'வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா ஆயிடை ஆரஞர் உற்றன கண்' பிரிவுத் துன்பத்தால் அக்காலத்தில் துயில் பெற்றதில்லை. தலைவர் வந்த இஞ்ஞான்றும் பிரிவாரோ என்னும் அச்சத்தால் துயிலுகின்றதில்லை. இவ்வாறு என்னுடைய கண்கள் பெருந் துயர் உற்றன என்று கூறுகின்றாள். 'தூவிரிய மலருழக்கி' என்னும் பாசுரத்தில் நீ ஆளுமட்டும் யாம் வளையாள மாட்டோமே' என்று திருமங்கை மன்னன் கூறுகின்றார். அதன் கருத்து நீ பிரிந்து போகுங் காலத்தில் உன் பிரிவை நினைத்து அதனாலுள்ள உடல் மெலிவால் வளை கழலுகின்றது. நீ வந்தால் உடல் பூரிப்பால் வளை உடைகின்றது. ஆதலினாலே யாம் எஞ்ஞான்றும் வளையாள மாட்டோம் என்று கூறுகின்றாள். இப்பகுதி திருக்குறட் பகுதியோடொத்து மிக அழகாக விளங்குகின்றது. தலைவியானவள் உடன் போக்கிற்கு உடன்பட்டாளென்பதைத் தோழி அறிவிக்கும் முறை சால அழகிதாகவுள்ளது. 'தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடி நோக்கி அஃதாண்டவள் செய்தது' தோழி தலைவனுடைய பிரிவை உணர்த்தினவுடனே தலைவியானவள் இவை கழலும். நில்லா என வளைகளை நோக்கினாள். அதற்கேதுவாக இவை மெலியும் எனத் தன் தோள்களை நோக்கினாள். இவ்வாறெல்லாம் நிகழாமல் நீ நடந்து பாதுகாக்க வேண்டும் என்று அடிகளை நோக்கினாள். அவள் செய்த குறிப்பு உடன் போக்கைக் குறிப்பதாயிருந்தது என்று கூறியது எவ்வளவு அழகாக இருக்கின்றது.

புலவி நுணுக்கத்தை நோக்குவோம். தலைவியும் தலைவனும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அப்போது தலைவன் 'யாரினுங் காதலம்' என்றான். அவன் சொல்லியது கணவனும் மனைவியுமாகக் காதலித்து வாழ்பவர்கள் யாரினும் நாம் மிகுந்த அன்புடையோம் என்பதாகும். அவளோ அதனை வேறுவிதமாகப் பொருள் செய்து கொள்கின்றாள். தலைவன்தன்னால் காதலிக்கப்படும் மகளிர் பலருள்ளாரென்றும், அப்பலரினும் நின் மாட்டுக்

காதல் மிகுதியுடையேன் என்றுங் கூறியதாக நினைத்துக்கொண்டு புலக்கின்ருள். புலந்து கொள்ளும்போது யாரைக் காட்டிலும் என் மீது காதல் மிகுதி யுடையீர் என்று வினவிக்கொண்டே புலந்து கொள்கின்ருள். இவ்வாறு அறம் பொருள் இன்பங்களை விரித்துக் கூறிய ஆசிரியர் நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் 4 அதிகாரங்களினுலே வீடு பேற்றையுங் கூறுகின்ருர். நாள் என்பது நம் உயிரீரும் வாள் என்றும், ஆதலின் 'நாச்செற்று விக்குள் மேல் வாரா முன் அறஞ் செய்க என்றும், நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு' என்றும் நிலையாமையை வற்புறுத்துகின்ருர்.

துறவில் 'யாதனின் யாதனின் நீங்கியான்'...... என்று துன்ப நீக்கத்திற்கு வழி கூறுகின்ருர். மெய்யுணர்வில் 'பிறப்பென்னும் பேதைமை நீங்க ....' அறிவு என்றும், 'காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்' என்றுங் கூறுகின்ருர். அவாவறுத்தலின் கண் 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்ட வரும்' என்றும், 'வேண்டாமை யன்ன விழுச் செல்வம்......அஃதொப்பதில்' என்றும் அற்றவர் என்பர் அவாவற்ருர் என்றுங் கூறுகிருர். ஆராவியற்கை அவா நீப்பின்......பேரா இயற்கை தரும்' எனவும் கூறுகின்ருர். இவ்வாறு ஆசிரியர் எல்லாப் பொருளையும் ஒழுங்கு படுத்தி உரைத் தவராவர். இத்தகைய அருமைத் திருக்குறளை யாவரும் போற்றிப் படித்துப் பெரும்பயன் உறுவாராக.

கூத்தராற்றுப்படை

வித்துவான். திரு. கு. சின்னையன் அவர்கள்
கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உக, மலர் எ, பக்கம் 184)

நன்னனிடம் செல்கின்ற பரிசிலன் கூத்தன் என்று கூறினுல், அந்நாட்டு மக்கள், தம் வீட்டிற்கு வந்ததுபோற் கருதுவார்கள். அவர்கள் செய்யும் உபசாரத்தால் நன்னனிடம் செல்வதையும் மறக் கும்படிச் செய்வார்களாம். இதனுல் நன்னன் தன்குடி மக்கட்கு எவ்வளவு உதவி செய்கின்ருன் என்பதும், அக்குடி மக்கள் அரச னிடம் வைத்திருக்கும் அன்பும் வெளிப்படுகின்றவல்லவா? இது போலவே பல இடங்களில் நயம்படக்கூறி யிருக்கின்றதனுல் நன்ன னுடைய சிறப்புக்களை நன்கறியலாம். இந்நூலிலுள்ள நயங்களை யெல்லாம் நன்குணர்தற்குக் கருவியா யிருப்பன நச்சினுர்க்கினியர் தம் உரையும், ஐயரவர்கள் குறிப்புமே யாகும். இவர் தம் உரை நயங் காட்டச் சிலகூறி யமைகின்றேன். "திருமழை தலைஇய" "மாபுகல்கானம்" "கொடியோள் கணவன்" என்ற அடிகட்கு

நச்சினார்க்கினியர் உரையின்றேல் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ள முடியாதாகும்.

திருமழை தலைஇய என்றால் நாம் என்ன கூறுவோமெனின், அழகிய மழை பெய்த என்றும், மாபுகல்கானம் என்றால், பெருமை யென்று மிகுத்துச் சொல்லப்படும்படியான காடு என்றும் கூறு வோம். வெய்யோள்-என்றால் (கணவனுக்கு) கொடுமை முதலியன செய்து வருந்தச் செய்கின்றவள். கணவன்-கொடுமையுடைய மனைவி யின் கணவனாகிய நன்னன் என்று பொருள் கூறி, விசேட உரையில், கணவர் மனைவியர் சிலர், நற்குணம் வாய்ந்தவராக இருப்பதும் இல் லாததும் உலக இயற்கை. அதுபோல நன்னன் நன்மைக் குண முடையவனா யிருந்தும் அவன் மனைவி கெட்ட குணமுடையவளா யிருக்கின்றாள். இதனால் நன்னனது புகழுக்கு இழுக்கில்லை.

“ எரியென் றெதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டிற் புகாதா ளரும்பிணி—அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை ” என்றார்

பிறரும் என்றே எழுதுவோம். இனி இவ்வடிகட்கு நச்சினார்க்கினியர் கூறுவதைக் காண்போம். திருமழை தலைஇய :—செல்வத்தை யுண் டாக்கும் மழையைப் பெய்த. மாபுகல்கானம் :—விலங்குகள் விரும் பித் திரியுங் காட்டின் தன்மை.

கொடியோள் கணவன் :—கொடியினை யுடையோள் கணவன் ; இதனால் அவன்தேவி கற்புமிகுதி கூறினார். இது நன்னனென்னும் பொருட்டாய் நின்றது. (அதாவது மரத்தையே பற்றுக் கோடாக உடைய கொடிபோல, நன்னனையே பற்றுக்கோடாக உடையவள். அம்மரம் சிறிது வாடினும் அத்தளிருடைக் கொடி வேறு மரத்திற் படர்ந்து செல்லாது வாடுதல் இயற்கையாகலின் இவன்தேவி கற்பு மிகுதியைக் கூறுகின்றார். செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப் புல்லுவிட்டிறைஞ்சிய பூங்கொடிதகைப்பன (கலி. 2) என்ற பாடல் இங்கே நினைத்தற்பாற்று.) இன்னும் இம்மலைபடு கடாத்தில், பாடிய உவமைகளும் அதற்கு நச்சினார்க்கினியர் உரைக் கும் உரையும் இன்புறத் தக்கதாம். பரிசில் பெறச் செல்பவனின் இசைக் கருவிகளை உயர்த்திக் கூறுகின்றார். அதில் அவனுடைய மத்தளம் மிகுந்த ஒலியுடன்கூடிச் சிறந்ததாயுள்ளதென்று சிறப்பிக் கக்கருதினார். இடிபோல் ஒலிக்கும் மத்தளம் என்றார். இடிதான் எந்த இடி, மழைபெய்வதற்குமுன் இடிக்கின்ற இடியா, அல்லது சிறிது மேகந்தோன்றி அதுபோது இடிக்கும் இடியா? இல்லை. மேகங்கள் நிறைந்த மழையைப் பெய்து, மீண்டும் பெய்வதற்காக, மேகம் கருநிறத்துடனிருக்கும்போது இடிக்கும் இடியென்று கூறுதற் காகவே, “ திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்து
திண்வார் விசித்த முழவொடு என்று

கூறியிருக்கின்றார். இதில் தலைஇய என்பதில் உள்ள செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தினை, செய்து என்னும் வாய்

பாடாகக்கொண்டு பொருள் கூறினர் நச்சினர்க்கினியர். ஆக மழை பெய்தபின் மேகங்கள் திரண்டிருக்கும் போதுள்ள இடியே மிக்க வொலியினை உண்டாக்கும் என்பது இதிலிருந்தும் தெரிகின்றது.

மற்றும் நிலங்களிலும் வானிலும் இருக்கும் இயற்கை எழிலினைக் கண்டார். அதனைத் தம் பாட்டிலும் அங்ஙனமே கூறுகின்றார். வானத்தில் மீன்பூத்திருப்பதுபோல், முசுண்டைப் பூக்கள் மலர்ந்தன. தயிரைக் கீழே தெளித்துவைத்தாற்போல் அவரைப் பூக்கள் பூத்துக் கீழே செறிந்து வீழ்ந்திருக்கின்றன. அரக்குகளைப் பரப்பினாற்போல் செந்நிலமாயிருக்கின்றன. செம்மறி யாட்டுக் கிடாயின் சிவந்த மயிர் போல் கூத்தர் பிள்ளைகளின் தலை சிவந்த மயிரினை யுடையவாயிருக்கின்றன. நியாயம் பேசுவார் இருவிரல்போல வரகுகள் இரண்டு பிளவாகப் பருத்து இருக்கின்றன என்றெல்லாம் கூறுகின்றார்.

கானவர் சேர்க்கையை அடைந்தால் அங்கு, வெள்ளாடுகளில் பலவகைகளும், செம்மறியாட்டில் பலவகைகளும் கலந்திருக்கின்றன என்பதைக் கூறுகின்றார். அவ்யாடுகள் கலந்திருக்கும் காட்சியை ஒரு உவமைகூறி விளக்குகின்றார். அதாவது பண்டம் விற்பவர்கள் பலவகையான நெல்லையும் வாங்குவார்கள். அந்நெல்லிலிருந்து எடுக்கும் அரிசிகள் எங்ஙனம் சிறிது வேற்றுமை தோன்றுகின்றதோ அதே போல் அவ்வாடுகளும் தோன்றுமென்று கூறுகின்றார். ஏன் இவ்உவமையைக் கூறுகின்றாரெனின், இவ்வாட்டில் கலப்புப் போன்றும், அரிசியின் கலப்புப் போன்றும் வேறுபாடு சிறிது தோன்றும் இவ்வேறு பாட்டைக் கண்டதும் நும்மனதில் அம்மக்கள்மேல் வேறுபாடான எண்ணங்கள் உண்டாகாமல் பாதுகாத்துக்கொண்டு, அக் கலப்புப்போன்று நீவிரும் கானவருடன் கலந்திருப்பீர். அவர்கள் நும் வழிவந்த வருத்தந்தீரத் தம்மிடம் இயற்கையிலுள்ள உணவாகிய "பாலும் மிதவையும பண்ணுஅது" கொடுப்பார். நீவிரும் அவற்றைப் பெற்றின்புற்று நன்னன்பால் ஏகுவீர், என்பதனைக் குறிப்பதற்கே அங்ஙனம் கூறினர்.

மற்றும் கானத்தில் கிடைக்கும் உணவைக் கூறுகின்றார். அதில் மூங்கிலரிசிச் சோறு கிடைக்கு மென்றார். இவ்வரிசியைப் பார்க்காதவர் பலரிருக்கலாம் அதனை விளக்கி எங்ஙனம் அவ்வரிசி யிருக்கு மென்பதனைக் கூறுகின்றபோது 'செவ்வீ வேங்கை யன்ன வேய்கொள் அரிசி 'என்றுயாவரும் விளங்கிக் கொள்ளற்பொருட்டு யாவரும் அறிந்திருப்பாரென்றெண்ணிய வேங்கைப் பூவைக் கூறினர். அதனையும் பார்க்காதவர்களிருந்தால் அவர்கட்கும் விளங்கவேண்டி சிவந்த நிறத்தையுடைய வேங்கைப்பூ என்று கூறி இருத்தல் மகிழற்குரியதாகும்.

இன்னும் இதில் பழமையான செய்திகளைக் கூறுகின்றார். இதிலிருந்தே அக்காலத்தவரது, எண்ணம், செயல், நாகரிகம் முதலியவற்றைச் சிறிதறியலாம். ஒருவர் தனக்குத் தெரியாத வழியில் சென்று விட்டால் அது வழி அல்ல என்பதைத் தெரிந்து திரும்பி விடுவார்கள். பின் அவ்வழியில் யாவரும் சென்று மீளாதிருப்பதற்காகத் தாம் தெரியாமற் சென்ற வழியில் இருக்கும் காலடிகளைக் கையால் தடவி அழித்து, அதில் யாவரும் நடக்காதிருத்தற் பொருட்டு, புல்லின்

நுனிகளை முடிந்து வைப்பார்கள். தற்காலத்திலும் சில பெருவழிகளில் (ரோட்டில்) சீர்திருத்த வேலைகளிருந்தால், அவ் வழியில் சிகப்பு வெளிச்சமுள்ள விளக்கையோ, அல்லது சிகப்புக் கொடியையோ, அல்லது மர முதலியன ஊன்றியோ ஒருவரும் செல்லாதிருத்தற்குத் தடுத்திருத்தல் அறிதற்குரியது. மற்றும் புலி பாய்ந்து பட்ட காயத்தால் உண்டாம் வருத்தத்தையுடைய தம் கணவர்கட்கு, அதனை நீக்குதற்கு இனிய குரலாலே பாட்டுப்பாடி அதனைத் தீர்ப்பார்கள். தற்காலத்திலும் வெட்டுப்புண் முதலியன உண்டாகித் துன்பமுறுபவர்கட்கு, சொல்வதைச் சொல்லி (கிராமபோன்-ரேடியோ) மூலமாக அவ் வருத்தத்தினைத் தீர்க்க முயல்வதும் அறியத்தக்கதாம்.

வேங்கைப்பூவைப் பறிக்க வேண்டிய பெண்கள், புலி, புலி, என்று கூவுவார்கள். கூவினால், வேங்கை மரம், வளைந்து கொடுக்க, அதினின்றும் பூவைப் பறித்துக் கொள்வார்கள்.

நிமித்தம் பார்த்துப் புறப்படுதலும், கடவுளைக் கண்டு தொழுது, செல்லும் காரியம் நிறைவேறினால் இன்னது கடவுட்குக் கொடுப்பேன் என்று கூறிச் செல்லுதலும், சூல் கொண்ட பெண்யானைக்கு, இரை தேடச் சென்ற யானையை, புலி அடித்துக் கொன்றதைக் கண்ட பெண்யானை, சப்தம் செய்து வருந்துவதும், திணை மக்கள் தங்கள் நிலத்திற்கேற்ற பண்களைப்பாடி மகிழ்வதும், வழி தெரியாதவர்கள், தம்மிடமுள்ள வாத்திய ஓசைகளால் வாசிக்க, அதனைக் கண்டு மகிழ்தற்கு வந்தவர்கள், வழி கூறி, வாழ்த்தியனுப்புவதுமாகிய செய்திகள் இதில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இங்ஙனம் கூறிய வழிகளின் வழியே புகழ்பெற்ற நன்னனிடம் சென்று புகழ ஆரம்பித்தால், அதனை வேண்டாமென்று கூறித் தடுத்து விடுவானும். ஏன்? இவ்வளவு தூரத்திலிருந்து வந்ததே எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆதலின் புகழ வேண்டியதில்லை என்னுகும். இவனிடத்துச் சென்று எத்தனை கால மிருப்பினும் முதல் நாள் கொண்ட அன்பிற் குறையாமலிருப்பான். பின்பு தாங்கள் ஊர் செல்ல வேண்டுமென்று கூறினால், தான் வருந்துவான். எதற்காக? இவர்கட்குப் பரிசில் கொடுக்கவேண்டுமென்று இல்லை. 'இன்மையினிரப்போர்க்கு ஒன்று ஈயாமையின், தொன்மை மாக்களின் தொடர்பறியாதவர்களைப் பற்றி நினைந்து வருந்துவான்.'

பின், பரிசில் பெறச் சென்றவர்களின் தலைவன் பொன்னாலாகிய தாமரை மலரைச்சூடவும், விறலியர் பொன்னாபரணங்களை அணியவும், மற்றையர்கட்கு, விரைந்து செல்லும் தேரினையும், பல மிகுந்த யானைகளையும், செவ்விய பசுக்களையும், கனைத்தற்றெழிலாற் சிறந்தவும் கடுகிச்செல்தற்குரியதுமான குதிரையும், கொடுத்தனுப்புவான் என்று இறுதியில் கூறுகின்றார். இங்ஙனம் தர மறிந்தியும் கொடைத்திறனும், கொற்றவன்றன் குணங்களும் குன்றெனத் திகழ்ந்து விளங்குகின்றன. இதிற் காணும் நயமான உவமைப் பகுதிகளைக் கற்றுக் களிகூர்வோம். வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்க் கலை!!

கொல்லிமலைச் செலவு.

ச. கணபதி, ஆசிரியர், பெருநிலக் கிழவர் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, துறையூர்.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 8, பக்கம் 200)

இவ்வாறமைக்கப்பெற்ற அவ்வீட்டிற்கு ஒரு பக்க ஓரத்தில் வாயிற்படி இருக்கும். ஆனால் அதற்குக் கதவிராது. வாயிற்படி இராத இன்னொரு பக்கத்தே பரண் அமைக்கப்பெற்றிருக்கும். வீட்டின் முக்காற் பகுதியில் மூன்று வெளிப்புறங்களில் சுவர்களை ஒட்டிப் பலகைகள் இணைக்கப்பெற்றிருக்கும். அப்பலகைகள் கூந்தற் பனைமரத்தினதாகும். முப்புறம் அடைக்கப்பெற்று, மற்றொரு புறம் வீட்டினுள் இருப்பதால் அடைப்பிலாது திறந்தேயிருக்கும். ஆண்டுச் செல்லும் நிலவாணர் வீட்டு வாயிற்படி வழி உட்சென்று பரணிற் படுப்பர். தரையிலிருந்து ஏறத்தாழ இரண்டடி உயரத்திற்குமேல் முன் கூறிய பலகைகளையே படுக்கை வயத்தில் இணைத்திருப்பர். முன் இணைப்பு பக்க வாட்டில் இருக்கும். சில பரண்களில் நடுவில் பலகைகளால் தடுக்கப்பெற்றிருக்கும். சில நடுவிலும் அடைப்பில்லாதிருக்கும். இவ்வாறமைந்துள பரணில் ஏறிப் படுத்தால் தரை ஈரம் தாக்காது. குளிர் அதிகம் இராது. அவ்வீட்டில் எஞ்சியுள்ள காற் பாகத்தில் அடுப்பு இருக்கும். ஆள் தலை மோதாத உயரத்தில் இரண்டு மூன்று பலகைகள் பொருள்கள் வைத்துக் கொள்ளப் போட்டு வைக்கப்பெற்றிருக்கும். அப்பரண் வீட்டிற்கு முன்னால் ஒரு சிறு களம் இருக்கும். இவ்வாறு எல்லா நலன்களும் இயைந்த முறையில் அமைக்கப் பெற்றுள்ள இப்பரண் வீடுகள் மலைக்கு வந்து செல்வோர் தங்கிச் செல்வதற்காக ஏற்படுத்தப் பட்டனவல்ல.

மலையர் பரண் வாழ்க்கை :—

மலை வாழுநர் தங்கள் நிலங்களில் அறுவடை செய்யப்பெற்ற கூலங்களைக் கொணர்ந்து இப்பரண்களில் கொட்டி வைப்பர். தரையில் எப்போதும் ஈரம் தங்கி யிருப்பதால், கூலங்களை அங்குக் கொட்டினால் அவ்வீரம் கூலங்களினும் சென்று தாக்கிக் கெடுத்து விடுமாகையால் மேற் கூறியவாறு பரண் அமைத்து அதில் கொட்டி வைக்கிறார்கள். பரண் அவரவர் வயல்களில் அமைக்கப் பெற்றிருப்பதால் அங்கொன்று இங்கொன்றாக இருக்கும். அவ்வவ்வயலுக் குரியோன் அறுவடை காலங்களில் அவனவன் பரணில் கூலங்களைக் கொட்டித்தான் கீழே தரையில் படுத்துறங்குவான். பரணிலும் கூலக் கதிர்கள் மேலேயே படுத்துறங்குவான். அம்மலையவர் அங்கேயே எப்போதும் இருந்து பழகி விட்டதால் அத்தட்ப நிலை அவர்களை ஒன்றும் ஊறு செய்வதில்லை. நாம் மலைக்குப் புதியராகையால் அத்தட்ப நிலை நம் உடலுக்கு

சேராது ஊறு செய்யும். அறுவடை காலங்கள் தவிர ஏனைய காலங்களில் ஊர்க்குள் அமைந்துள அவனவன் வீட்டிற் படுத்துறங்குவான்.

விளைபொருள் :—

நாங்கள் தங்கிய பரண் வீட்டிற்கருகில் ஒரு சிறு மடுவில் நீரில் 'வசம்பு' எனும் மருந்துப் பொருள் மிகுதியாக முளைத்திருந்தன. இது சின்னஞ் சிறு குழந்தைகளுக்குக் கக்குவான், வயிற்றுவலிக்குச் சிறந்த மருந்து. நாங்கள் அம் மடுவில் இறங்கி இரண்டொன்றைப் பிடுங்கி, தாள் நீக்கிக் கிழங்கை எடுத்துக் கொண்டோம். என் பள்ளி மாணவர்கட்குக் காட்ட நான் அதைத் தாளொடு கொண்டேன்.

கோயிலூர் செல்லும் வழியில் கரு, வெண்மொச்சைகள் புழுதிக் கார்நெல், மா, பலா, ஆரஞ்சு, வாழை, அவற்றின் அடிநிழலில், காஃபிச்செடி, சுண்டைச்செடி, முதலிய பயிர்வகைகளையும் மரவகைகளையும், செடிவகைகளையும் பார்த்துப் பார்த்துப் பெருமகிழ்வெய்தினேம். இனிமேல் மலையர் நாகரிக, பழக்க வழக்கங்களை ஒருவாறு கூறுவாம்.

மலையர் வீடுகள் :—(கோயிலூர்த் தோற்றம்):—

இவ்வூரிலுள்ள வீடுகளின் அமைப்பைக் கூறுமிடத்து மேற் கூரைகள் நம் நாட்டுப் பண்டைக் காலத்துப் பழம் பெருங்கோயில்களின் முன்னிலையில் அமைக்கப்பெற்ற கோபுரங்களைமான வேயப் பெற்றிருந்த காட்சி பலகோயிற் கோபுரங்கள் ஒருசேரத் தொகவிருக்கின்றனபோல் மிக அழகாக இருந்தன. ஆனால் அவ்வூருட் புக்கு நோக்குங்கால் வீட்டின் நாற்புறமும் தீ நாற்றமும் மற்றும் கரும்பன்றியும், செந்நாயும், பலவின் தோலும், குப்பை கூளங்களும், நீர்நிறைதேக்கங்களும், சேற்றுவழியும், நாற்றவெளியும் மலிந்து காணப்பெற்றன. இல்லின் வெளியே ஒருமருங்கில் சுளைகளை நீக்கிய பலவின் உட்டோல் நரம்புகளைப் பன்றி சப்பிச் சப்பித்தின்று கொண்டிருக்கிற காட்சி பார்ப்பார் கண்களுக்கு அருவருப்பாயிருக்கும்.

வீட்டின் உள்தோற்றம் :—

இத்தகு சூழலிடைச் சிக்கிய நாங்கள் அவைகளைக் கடந்து அப்பாற் சென்றேம்; வீட்டின் உள்ளே விரைந்துபுக்கேம். ஆங்கு இளையர் முதியர், காளை கன்னி, சிறுவர் சிறுமி ஆமிவர் அனைவரும் ஒன்றிய வாழ்வில் உவப்புடன் நின்றனர். இன்முகத்தோடு எமைவரவேற்றனர். அவர்கள் இல்லின் உள்ளே கூடை, முறம், சட்டி, பானை மட்குடம் முதலிய தட்டு முட்டுப் பொருள்களை மேற்பரணிற்போட்டு வைத்துள்ளார்கள். மண்ணுற் செய்யப்பெற்ற அடுப்பும், ஆடைகள், குடையனைய சில பொருள்களை மாட்டக் கயிற்றில் கட்டித் தொங்கிய கவட்டைக் கழிகளும், மாவரைத்தற்கு விரிப்பாய் உதவும், மயிர் நீக்காது பதம் செயப்பெற்ற ஆட்டின் தோலும் எங்கள் பார்வையில் விழுந்தன. இவ்வீடுகளின் அமைப்பு ஏற்கனவே கூறியுள்ள பரண் வீடுகளின் அமைப்பை ஒத்தனவே. ஆனால் இவை மலைச் சரிவுகளில்

பலதொக படிப்படியாய் அமைந்துள்ளன. பரண் வீட்டினும் பெரிய அளவில் செயப்பெற்றுள்ளன. இங்குப் பரண் ஆறடி உயரத்தில் தலையில் இடிக்காவண்ணம் அமைக்கப்பெற்றிருக்கும். காட்டில் தனித் தனியேயுள்ள பரண்வீடு தரைக்குமேல் இரண்டடி உயரத்தில் அமைந்திருக்கும். இங்குள்ள இல்லிற்கு அருகே இல்லை ஒட்டிக் கூலங்கள் கொட்டிவைக்கப் பலகைகள் இணைத்துச் செயப்பெற்ற சேர்களில் கோதுமை, நெல், சாமை, தினை, சோளம், கேழ்வரகு, கம்பு, காடைக்கண்ணி, வரகு முதலிய கூலங்கள் வகை வகையாய் வைக்கப் பெற்றிருக்கும்.

மலைவாணர் உணவு :—

பொங்கல், தீபாவளி, ஆடிப்பதினெட்டு, சித்திரை முழுநிலா, உவாநாள் முதலிய விழா நாட்களில் நெற்சோறுண்பர்; ஏனைய நாட்களில் கேழ்வரகு, தினை, சாமைச் சோற்றினை உண்பர். நெல்லில் நன்செய்யில் விளைந்த செந்நெலும், புன்செய்யில் விளை புழுதிக்கார் நெல்லு மென இருவகையுள்ளன. இவர்களுக்கு இவை யன்றியும் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, சருகுமான், செம்மறிமானும் கலைமான், ஆடு ஆமிவைகளைக் கொன்று இவற்றின் இறைச்சியை உண்பதில் வேட்கை அதிகம்; வேட்டையாடுவதில் மிக்கவா உண்டு. உறுதி முறிச்சீட்டு (Licence) பெற்று, துப்பாக்கி வைத்திருப்போர் வேங்கை, சிறுத்தைப்புலி முதலிய விலங்குகளை வேட்டமாடிக் கொல்வர்; ஆனால் அவைகளின் இறைச்சியை உண்ணார்; தோலைப் பயன் படுத்துவர். ஏனையோர் குறுங்கண் மாவலையைப் பரப்பி ஈட்டி, குறுந்தடி, குண்டாந்தடி, வாள், வேல் முதலியன பயன் படுத்தி சிறு விலங்குகளைப் பிடிப்பர்; இறைச்சியை உண்பர்.

அரசாங்கத்தாரின் உணவுபொருட் பெருக்கவேலை :—

பெரும்போர் நிகழும் இக்காலத்தில் இம் மலைத்துறை அலுவலாளர் அரசாங்கத்தார் பல இடங்களிலும் செய்வதைப் போல் இம் மலையிலும் முட்புதர் செடி கொடி மரங்கள் அடர்ந்துள்ள சரிவுக் காடுகளை அழித்து ஆங்கு, புழுதிக்கார் நெல், கேழ்வரகு முதலிய வற்றைப் பயிரிடச் செய்து உணவுப்பொருட் பெருக்க ஆக்க வேலை (Grow more food) செய்து வருகின்றனர்.

உடை :—

ஆடவர்களில் சிறுவர் முதல் முதியர் வரை ஒவ்வொருவரும் கோவணம் கட்டி யிருக்கின்றனர். அதற்கு மேல் உடலில் ஓரைந்து முழ வேட்டி போர்த்தி யுளர். பெண்டிர்களில் பேதை முதல் பேரிளம் பெண் வரை ஒவ்வொருவரும் ஐந்து முழ வெண்ணிற உடையால் மார்பை அவ்வுடைக்கு உள்ளிருத்தி மார்பிற்கு மேலே இறுக்கிக் கட்டி யிருப்பர். மிகச்சில ஆடவரே கஞ்சுகம் (சட்டை) அணிவர். பெண்டிர்கள் கூந்தலைக் கொண்டையாக முடிப்பர்; ஆடவர் பின்னால் முடிவர். இருபாலாரும் முடியில் கொண்டைஊசி குத்தியிருப்பர்.

அணி கலன்கள் :—

ஆடவர் கடுக்கன், அரைநாண், மோதிரம், இவைகளை அணிகலன்களாக அணிவர். பெண்டிர் தம் கழுத்தில் புலி நகம் போலும் வளைத்துச் செயப்பெற்ற ஒரு அணியும், பொட்டு எனும் அணியும், முள்வாங்கி, குத்தூசி, காதுகுறும்பி எடுக்கி முதலிய அணிகலன்களை வெள்ளியாற் செய்து நூல் கயிற்றில் கோத்துக் கழுத்தில் சூடியுளர். மணமான பெண்கள் தாலிப்பொட்டு அணிந்துளர். அவர்களிற் சிலர் வெள்ளியால் புயவளை (தண்டை) செய்து அணிந்துளர்.

மலையர் தோற்றம் ;—

ஆடவரும் பெண்டிரும் அத்துணை அழகுடையவரல்லர். சப்பை மூக்கும், சிறிது தடித்த உதடும், கருத்த மயிரும், கட்டமைந்த கார்நிற உடலும், உரனுடை மார்பும், கள்ளமில் உள்ளமும் உடையராவர். அவர்கள் நம்மைப் போல் நாடோறும் நறுநீராடார். திங்கள் (மாதம்) ஒரு முறை ஒரு பெருங் கலத்தில் நீரைக் காய்ச்சி, பருத்த மூங்கிலின் பெருத்த மரத்தை வெட்டிக் குழாயாகக் குவளைபோல் செய்த ஒரு கலத்தாலும், இரும்புப்படியாலும் அவ்வெந்நீரை முகந்து சிறுவர் முதல் முதியர் வரை ஊற்றிக்கொள்கின்றனர். அவர்களுக்குக் கூட அம் மலையிலுள்ள தண்ணீர் உடலுக்குச் சேர்வதில்லையாம். அன்றாடம் நீராடாத் தன்மையால் அவர்கள் உடலில் ஒரு தீநாற்றம் வீசும். ஆடையும் தூய்மையாயிராது. மாசு படிந்திருக்கும். விழா நாட்களில் மட்டும் ஆடைக்கு மிகச் சிலர் சவர்க்காரம் தேய்த்துத் துவையல் செய்து தூய்மைப்படுத்துவர்.

பள்ளிக்கூடம் :—

இவர்களிற் கல்வி கற்றோர் மிக வரியர். காரணம் பள்ளிக்கூடம் ஐந்து, பத்து கற்களுக்கு அப்பால் இங்கொன்று அங்கொன்றாக அமைந்துளதால் கல்லாக் குறை எல்லார் மாட்டும் இயைந்துள்ளது. இக்கல்வி யறிவின்மையே அவர்கள் தூய்மையின்மைக்கு இன்றியமையாக் காரணமாகும். இப்போது சிற்சிலர் புதுமுறை ஆங்கிலக் கல்வி பெற்று வருகின்றனர். வலப்பூர், திகைவாய், வாளைவந்தி எனு மிடங்களில் பள்ளிகள் உள்ளன. பள்ளிக்கூடங்கள் மிகுதியாயில்லா இக்குறையை மலை அரசாங்கம் இனி மேலாவது கவனித்தல் வேண்டும்.

பழக்க வழக்கங்கள் :—

மலையர்களின் பழக்க வழக்கங்கள் நம்மின் மாறுபட்டுள்ளன. அவை சிறிது தருவாம்.

1. சிறுவனாயிருக்கும் ஒருவன் தன் வயதுக்கு மேல் மூத்த பெண்ணை மணப்பது வழக்கம். (பன்னிரண்டு வயது சிறுவன் இருபது வயது பெண்ணையும் அதற்கு மேல் வயதான பெண்ணையும்) அவ்வாறு மணந்த பின் வயதான் மூத்த மனைவி தன் சிறுவனாகிய கணவனை விட்டு (மாமன், மைத்துனன் முறையிலுள்ளோர்) கணவன் அண்ணன், கணவன் தந்தையோரையும் வேறெவரையும் விரும்பி,

அவர்களோடு சேர்ந்து இன்பம் நுகரலாம். ஆனால் குழந்தை பிறந்த பின் உரிமைக் கணவன் வந்து அவளை அழைப்பான். குழந்தையும் தாயும் அவன் வீட்டுக்கு வந்துவிட வேண்டும்; தாய் மட்டும் வர விரும்பாவிடில் சேர்ந்தவனிடமே இருக்கலாம்; வர விரும்பின் வரலாம். ஆனால் குழந்தைகள் மட்டும் கட்டாயம் தாயின் உரிமைக் கணவனிடம் வந்தே தீரல் வேண்டும். குழந்தைகள் சேர்ந்தவனுக்குப் பிறந்தனவாயினும் தாயின் உரிமைக் கணவன் மக்களாகவே கருதப்படுவர்; அவன் சொத்திற்கும் இவர்களே உரியர். அவ்வாறே அழைக்கவும் பெறுவர். உரிமைக் கணவன் இறந்தால் தான் அவன் மனைவி வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளலாம். கணவன் இருக்கும்போது வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளலாகாது. ஆனால் வேறொருவனிடம் கூடி இன்பம் நுகரலாம்.

2. ஒருவன் மனைவியை வேறொருவன் ஒருவருக்கும் தெரியாமல் அழைத்துச் சென்று இன்பம் துய்த்தலும் உண்டு. இச் செய்கை வெளிப்பட்டுக் கண்டு பிடிக்கப்பட்டால் பெண்ணைக்கொண்டு சென்றோன் அம்மலை நாட்டு வழக்கப்படி உற்றார் உறவினர்களுக்கு சமூகத் தலைவனால் முடிவு செய்யப்பட்ட (பன்றிக்கறி, கேழ்வரகு முதலிய வகைகள்) ஒரு விருந்து செய்தல் வேண்டும். அபராத தொகை கொடுத்தலும் உண்டு. இவை அவன் செய்த அக் களவிற்கு ஏற்பட்ட தண்டனைகள் ஆகும். சில வேளை திருமணம் செய்த கணவனுக்கேற்பட்ட திருமணச் செலவை (பரியம்) சேர்ந்தோன் உரிமைக் கணவனுக்குக் கொடுத்துவிட்டு, சமூகத்தார் முன் அக் கணமே தாலிகட்டி விருந்து வைத்து தனக்கு உரிமை ஆக்கிக் கொள்வான்.

3. திருமண முறை ;—திருமண நாளன்று அடிவாரத்திலிருந்து அந்தணப் புரோகிதர் வந்து மணவீட்டில் சில மந்திரங்களைச்சொல்லி, சில சடங்குகளைச் செய்து, சில வெண்பொன்களையும் ஆடைகளையும் பெற்றுச் செல்வர். இறப்பு, இறுதி, நாட்சடங்கு நாட்களிலும் அவ்வாறே. இப் பார்ப்பனப் புரோகிதர் சென்ற பின் மலையர்களின் ஊராண்மைக்காரர்கள் அல்லது நாட்டாண்மைக்காரர்கள் தலைமையில் கணவன் பெண்ணிற்குத் தாலிகட்டியதன் மேல் விருந்து உண்பர். இத்தோடு மணம் முடிந்தது. இறப்பு இறுதி நாட்சடங்கு நாட்களிலும் இவரை முன் வைத்தே செய்வார்கள். மண நாட்களில் மணப் பறையையும் இறப்புக் காலங்களில் சாப்பறை, கொம்பு, தடாரி, தண்ணுமை முதலிய வாச்சியங்களையும் ஒலிப்பர். கொல்லி மலையில் அறப்பளீயீசர் மலையுளதாலும், பலன் தரும் மலையாதலாலும் நில நாட்டு மக்கள் மிகுதியாகச் செல்வதாலும் அம் மக்களின் நாகரிகம் (மந்திரம், சடங்கு) முதலியவற்றை இம் மலையரும் சிறிது பின்பற்றி வருகின்றனர். பச்சை மலைக்கு ஒரு சில மிகக் குறைந்த மக்களே செல்வதால் ஆங்கு, பார்ப்பனப் புரோகிதமும், சடங்குகளும் ஒரு சிறிதும் கிடையா. அவர்கள் தங்களுக்குள்ளேயே தலைமையாயிருப்பவர்களை வைத்து மணம், இறப்பு, இறுதி நாட்சடங்குகளை நடத்திக் கொள்வார்கள். கொல்லி மலையிலும் துவக்கத்தில், முற்

காலத்தில் இம் முறையில் தான் மக்கள் இருந்திருக்க வேண்டும். இடையிலேயே மாறியிருக்கவேண்டும்.

மலை ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் :—

தமிழ் நாட்டிலுள்ள எல்லா மலைகளிலுமுள்ள ஊர்களின் பெயர்கள் அனைத்தும் தனித் தமிழ்ப் பெயர்களே. எடுத்துக் காட்டாக இக்கொல்லி மலையில் உச்சியிலும் அடிவாரத்திலும் வலப்பூர், வாளைவந்தி, கோயிலூர், திகைவாய், சோறடைப்பட்டி, ஓயங்குழி, பிலாண்டூர், பசலைக்கோம்பை, அடுக்கம், பெரிய கோம்பை, சுக்கலாம் பட்டி, பெரிய வளைவு, கல்லாத்துக் கோம்பை, முதலிய ஊர்கள் தனித் தமிழ்ப் பெயர்களே. இவற்றில் கோம்பை என்று வருவனவெல்லாம் அடிவாரத்திலுள்ள ஊர்களாகும்.

இவ்வாறே பச்சைமலையின் மேலேயும் அடிவாரத்திலும் வண்ணாடு, தென்பரனாடு, கோம்பை, (பூனாச்சி) முதலிய ஊர்கள் உள்ளன. அவற்றின் பெயர்களும் தூய தமிழ்ப் பெயர்களாகும். இவைகளைக் கேட்டபோது தமிழ் ஆர்வமுடைய என் மனம் குளிர்ச்சியடைந்தது.

5. மக்களின் பெயர்கள் (ஆடவர்) :— இவர்களில் ஆடவர் குப்பன், வேலன், கருமன், ஆண்டி, சேவி, அறப்பளி, பாபு (பார்ப்பு என இருந்து பாப்பு ஆகி பாபு ஆகி இருக்கவேண்டும்) வடமலை, திருமலை, பழனி முதலிய தனித்தமிழ்ப் பெயர்களையும், பெண்டிர் பழனியம்மாள் (அம்மை) குப்பம்மாள், குப்பச்சி, வேலம்மாள், பூச்சம்மாள், நல்லம்மாள், செல்லாயி, செல்லி, கருப்பாயி, மூக்காயி, பாபு (பார்ப்பு, பாப்பு,) காளியம்மாள், வெல்லி, வெள்ளைச்சி, செம்மூஞ்சி முதலிய தூய தமிழ்ப் பெயர்களையும் பெற்று அழைக்கப் பெறுகின்றனர்.

ஆனால் இந்நில நாட்டுமக்கள் நாகரிகம் மலையில் சிறிது இந் நாள் பரவவே முற்கூறிய செந்தமிழ்ப் பெயர்களோடு துரைசாமி, இராமசாமி, கந்தசாமி, பார்வதி, மீனாட்சி, காமாட்சி, கந்தம்மாள், முதலிய வடமொழிப் பெயர்களும் சிறு வரவிற் கலந்துள்ளன.

6. இம் மலையரது குலம், இனம் :— நம் பழந்தமிழ் நூல்கள் மலையர் பெரும்பாலும் குறவர் இனத்தவர் என்றே கூறும். ஆனால் இன்று அதற்கு மாறாக அனைவரும் குறும்பர் இனத்தவராகவே உள்ளனர்.

இக்கருத்தைப்பற்றி எம் நண்பர் சிட்டி என்பவர் இம்மலையர் அனைவரும் (பச்சை, கொல்லி மலையர்) ஒரு காலத்தில் காஞ்சிபுரத்தினின்று இவண் வந்து குடியேறினவர் என்று ஒரு ஆசிரியர் எழுதியுள்ள வரலாறு கூறுவதாக எடுத்துச் சொன்னார். அது ஒரு வகையில் பொருத்தமாகவே உளது. குறும்பு என்றால் காடு. அக் குறும்பில் வாழ்பவர் குறும்பர். காஞ்சிபுரம் ஒரு காலத்தில் காடாயிருந்தது. அக் காட்டில் வாழ்ந்த குறும்பர் சில காரணங்களால் (பஞ்சம், பசி) இவண் வந்திருக்கலாம். இங்கேயே தங்கி உறைந்திருக்கலாம். ஆனால்

பழந்தமிழ் நூல்களிற் கூறப்பெற்ற குறவர் இனமே மலையில் காணப் படவில்லை. இருப்பினும் சிறு தொகையில் இருக்கவேண்டும். அக் குடி சிறிது ஒழிந்தும், எ ஞ் சி ய ன நில நாடுகளுக்குக் குடியேறி வந்தும் குறைந்து போயிருக்கவேண்டும். இதைப்பற்றி அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து தெளிவான கருத்துக்களை வெளியிடல் வேண்டும்.

இம் மலைவாணர் அனைவரும் குறும்பர் இனத்தவராம். காராளர் மரபினராம். (குலம்) இவர்களில் 1. பெரியநாட்டுக் குறும்பன். 2. சிற் றூர்க் குறும்பன். 3. சிற்றூர் மூப்பக் குறும்பன் என மூன்று பிரிவு உண்டு.

1. பெரிய நாட்டுக் குறும்பன் பத்து, இருபது சிற்றூர்கட்குத் தலைவனுவான். 2. சிற்றூர்க் குறும்பன் தான் வாழும் சிற்றூர்க்குத் தலைவனுவான். 3. சிற்றூர் மூப்பக் குறும்பன் சிற்றூர் மூப்பன் (கிராம மூப்பன்) என அழைக்கவும் படுவான். இவன் முற் கூறிய இருவர்க்கும் தொண்டு வேலைகள் செய்வான். இவ்வாறு படிப்படியே இவர்கள் தங்கள் தொழிலால் உயர்ந்து வேற்றுமைப்பட்டு, பிறவியால் குலத்தால் ஒருவரேயாவர் (ஒரே குலத்தவர்.)

கொல்லி மலைவாணர்கட்கும் மற்ற மலைவாணர்கட்கும் உள்ள தொடர்பு :-

சேலத்தை அடுத்துள்ள சடையக் கவுண்டன் மலையிலுள்ளவர் கள், தாயபாகத்தார் (பங்காளி) முறையில் இக்கொல்லி மலைவாணர் களின் மூத்த அண்ணன்மார்கள். இச் சடையக் கவுண்டன் மலையில் குறும்பர் மரபைச் சேர்ந்த ஐந்து பெரு நிலக்கிழவர் உள்ளனர். பச்சை மலைவாணர்கள் மேற் கூறிய சடையக் கவுண்டன் மலைவாணர் களின் அடுத்த தம்பி முறையில் உள்ளவர்களாம். கொல்லி மலை வாணர்கள் பச்சை மலையர்களின் அடுத்த தம்பிமார்களாம். இம் மூன்று பிரிவினர்களும் தங்களுக்குள்ளேயே கொள்வினை, கொடுவினை செய்து கொள்ளுவார். (எடுத்துக் காட்டாக கொல்லிமலை வாழ்பவர் அவர்களுக்குள்ளேயும், அதைப்போல ஏனை இரு மலை வாழுநரும் அவரவர்களுக்குள்ளேயும் பெண்ணைக் கொடுத்துப் பெற்றுக்கொள் வார்கள். ஆனல் வைப்பாக வைத்துக்கொள்ளலாம். கொல்லி மலை வாணர் பச்சை மலைவாணர்க்கும், ச டை ய க் கவுண்டன் மலையர் களுக்கும், பச்சைமலையர், கொல்லி, சடையக்கவுண்டன் மலையருக்கும், சடையக் கவுண்டன் மலை வாழ்வோர் கொல்லி பச்சைமலை வாழ் வோருக்கும் மாறிப் பெண் கொடுக்கவும், ஏற்கவும் மாட்டார்கள்.) குறும்பர் என்ற தனித் தமிழ்ப்பெயர் இக் காலத்தில் 'கௌண்டர்' என்று வேற்று மொழிச் சொல்லில் வழங்கி வருகிறது. பச்சை மலையில் ஆடவர் கொல்லிவாணரைப் போலவே கோவணம் கட்டி, உடலில் ஐம்முழ ஆடை போர்த்தியிருக்கின்றனர். ஆனல் பெண்கள் மட்டும் இடையில் ஐந்து முழ ஆடையைக் கட்டிக்கொண்டு, திறந்த மார்புடனே இருந்தனர். இப்போது அப்படி இல்லை. மாராப்பு போட்டு 16 முழ பல நிற ஆடை கட்டுவர். அது அவர்களுடைய தொன்று தொட்ட பழக்கமாய் உளது.

பச்சை மலை நாகரிகம் :—

பச்சை மலையில் ஒருவனை ஒருத்தி மணந்து கொண்ட பின் சின்னாளில் அக் கணவனிடம் கூடி வாழ மன விருப்ப மின்றேல் அவர்கள் குல வழக்கப்படி பலர் கூடி வழக்கைத் தீர்த்து அவளிடம், வாக்கு மூலம் வாங்கிக்கொள்வர். அப்பெண் முதலில் திருமணம் செய்து கொண்டவனுக்குச் சிறிது தொகை வெண்பொன் கொடுத்து விரும்பிய வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளலாம். இப்பச்சை மலை உறைவோரில் மணம் செய்து கொள்ளும் ஆடவன் திருமணத்திற்கு முன் (பரியப் பொருளாக) வெண்பொன் ஐம்பத்தேழு ஏழையாயினும், செல்வனாயினும் பெண் வீட்டாருக்குக் கொடுத்தல் வேண்டும். கொல்லியின் குடிகள் அவரவர் தகுதிக் கேற்ற முறையில் வெண்பொன் பெண் வீட்டாருக்கு ஈவர். இத்தோடு மலைவாணர் நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஒருவாறு தொகுத்துக் கூறப்பட்டன.

காலை உணவு :— (சிற்றுண்டி.)

இனி மேல் தொடர்ந்து எம் செலவைப் பற்றிக் கூறுவன். கோயிலூரிலிருந்து பரண் வீட்டிற்கு நாங்கள் விரைந்து நடந்தேம். அப்போது காலை மணி எட்டு இருக்கும். பரண் வீட்டில் நாங்கள் செல்வதற்கு முன் பலாப்பழங்கள் பிளக்கப்பட்டுச் சுளைகள் குப்பல் குப்பலாக தட்டில் பரப்பப் பெற்றிருந்தன. வாழைப்பழங்களும் வகையாய் வாழையிலையில் வைக்கப்பெற்றிருந்தன. அவைகளைக் கண்ணுற்றதும் நாங்கள் 'காய்ந்த மாடு கம்பங் கொல்லையிற் புகுந்தாற் போல்' பசி மிகுதியால் ஆவலோடு வயிறார உண்டேம். அதன் பின்னர் உப்புமாவை, உண்டு காஃபியும் அருந்தினேம். உணவு கொண்ட பின் அனைவரும் ஒன்று கூடிப் புறப்பட்டு, மலையினின் றிழிந்தேம். அப்போது மணி பத்து இருக்கும். எங்கள் மூட்டைகளை முன்போலவே மலைவாணர் இருவரும் தலையிற் சுமந்து வந்தனர். அவர்களுக்கு மலை ஏறுவதும் இழிவதும் எளிய வேலையாயுளது. நாம் மாலை வேளையில் தட்பவளிபெறச் சோலை வெளிகட்கு மகிழ்ச்சி யோடு உடற்றளர்வு சிறிதுமின்றி எவ்வாறு செல்வேமோ அஃதே போன்று அவர்கள், மகிழ்ச்சியாகத் தளர்வு சிறிதுமின்றி ஏறி இழிந்து சென்றார்களெனின் அக்கூற்று மிகையாகாது. அத்தொழில் அவர் கட்குத் தொன்று தொட்டு மேற்கொண்டு வரப்பெற்றதாகும். அக் காரணத்தாலேயே அவர்கள் அதை அவ்வளவு எளிதாகக் கருது கிறார்கள்.

நாங்கள் தங்கியிருந்த பரண் வீட்டிற்கருகில் நிலங்கள் பள்ளம், சிறிது உயர்வு, அதனினும் உயர்ச்சி என இவ்வாறு படிப்படியாக உயர்ந்து காணப்பெறும் காட்சி எங்கள் கட்கினிய காட்சியாயிருந்தது. கீழிறங்கி வரும்போது தற்காப்பிற்காக நாங்கள் ஆளுக்கொரு தடி ஊன்றிக்கொண்டோம். ஏற்றம், இறக்கம், சமநிலம் முதலியவைகளைக் கடந்து நடந்தேம். இயற்கை வளங்களையும் கண்ணுறக் கண்டேம்; இன்புற்றேம்.

(தொடரும்.)

சிறு சோறு.

வித்துவான். வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 6, பக்கம் 133)

வணிகர் வகை.

சீவக சிந்தாமணியில்,

'வாவிப்புண் ணடையி னுளை வஞ்சித்துத் தக்க நாட்டை
மேவியான் காண லுற்றுச் சார்தலும் இப்ப ருள்ளான்
தூவிப்பொன் மாட மூதூர்ச் சுபத்திர னென்னைக் கண்டே
ஆவிக்க ணறிவு போல அளவளா யன்பு பட்டான்'

என்னுஞ் செய்யுளின் உரையில், 'வணிகர்—இப்பர், கவிப்பர், பெருங் குடியர் என்று மூன்று பாலார்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கின்றார். இதனால் வணிகர் மூவகையினர் என அறிய லாகும், ஆயினும் அவர்தம் இலக்கணம் அறியப்படுமாறில்லை. இனி, சிலப்பதிகாரத்தில்,

'மத்திம நன்னாட்டு வாரணந் தன்னுள்
உத்தரன் கவிப்பற் கொருமக னாகி' (15. 178, 9)

என்னுமிடத்து, 'வாரணம்—ஸ்ரீவாரணாசி. கவிப்பன்—பசுமறையைத் தேடின பொருளுடையவன்' என்று அரும்பத வுரையாசிரியர் எழுதி யிருக்கின்றார். அக்காப்பியத்தில்,

'பெருங்குடி வாணிகன் பெருமட மகளே' (2. 76)

'பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும்' (5. 41, 2)

'பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறும் மறுகி' (15. 60, 61)

என்னுமிடங்களில் பெருங்குடி வாணிகன் என்னுஞ் சொல் வந்திருப் பினும் அவ்விடங்களில் பெருங்குடி வாணிகன் என்பது வணிகருள் ஒரு வகையினன் என்று உரை எழுதப்படவில்லை. இனி, 'பெருங்குடி வாணிகர்' (5. 41) என்பதற்கு, 'பெரிய குடிப்பிறப்பை யுடைய வாணி கர்' என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதியிருக்கின்றார். இதனை நோக்கின், பெருங்குடி வணிகர் என்பார் வணிகருள் ஒருவகையினர் என்று அவர் கருதிற்றிலர் என்பது தெளிவாகும். அரும்பதவுரை காரர் ஒன்றுமே எழுதிற்றிலர்.

மூவகை வணிகர் தம் பெயரும் அவர்தம் இலக்கணமும் 'சீவ சம் போதனை' என்னுங் காப்பியத்திற் கூறப்பட்டுள்ளன. அவற்றை நோக்குவோம்.

'அந்நகரத்து வைசிய குலத்தார் எவ்வகையோர் எனின்,

இப்பர் கவிப்பர் பெருங்குடி வாணிகரென்
றெப்புடைய மூவர் உரைக்குங்கால்—தப்பின்
மிதியடியே முனைமிசை நோக்கினர்கண் காணு
நிதியுடைய ராவர் நிலத்து.

இப்பரும் கவிப்பரும் பெருங்குடிவணிகரும் என மூவர் வைசியர். அவருள், பொன்னின் ராசியை நடுவே குவித்து யானைமேல் ஏறிக் * குடையிடை நின்றால் ஒருவரை ஒருவர் காணவொண்ணாத பொன்னின் ராசியை உடையவர் இப்பராவர். அப்படியே இடபத்தின் மேல் ஏறிக் குடையிடை நின்றால் ஒருவ ரொருவரை காணவொண்ணாத பொன்னின் ராசியை உடையர் கவிப்பராவர். மிதியடி மேல் ஏறிக் குடையிடை நின்றால் ஒருவ ரொருவரைக் காணவொண்ணாத பொன்னின் ராசியை உடையவர் பெருங்குடி வணிகராவர். (6. 42)

இவற்றால் மூவகை வைசியரின் இலக்கணம் அறியப்படும். இவற்றுள் இப்பர் என்பது இபத்தின் தொடர்பு பற்றி வந்த பெயர். கவிப்பர் என்பது கௌவின் தொடர்பு பற்றி வந்த பெயர். பெருங்குடிவாணிகர் என்பது இம்முறைப்படி மிதியடியின் தொடர்பு பற்றி வந்த பெயராதல் வேண்டும். அவ்வாறில்லாதது ஆராய்தற்குரியதாயுளாது. இனி, யானைமேல் ஏறிநிற்றல், ஏற்றின் மேல் ஏறி நிற்றல் என்ற முறைப்படி எருதினுஞ் சிறிய விலங்கொன்றன் மேல் ஏறி நிற்றலைக் கூறுதலே முறையாகும். அவ்வாறில்லை. இவற்றை நோக்கின், பெருங்குடிவாணிகர் என்னும் பெயரும் அதன் இலக்கணமும் அமைவுடையனவாயில்லை என்பது அறியப்படும்.

கன்னட மொழியில் உள்ள ஜீவசம்போதனையில் மூவகை வணிகர் பெயரும் இலக்கணமும் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

வைசிய சாதியுள் உயர்வுடைய மூன்று நிலையினர் ஏனையர் எனின்,

பொன்னெல்லாவற்றையும் ஓரிடத்தில் குவித்து, உயர்ந்த ஏழகத்தின் மேல் ஏறி நோக்குகையில் பொன்னுக்கு அப்பால் இருப்பவர் காணப்படாத அளவு பொன்னையுடையவன் ஏளகன். (6. 29)

பொன்னைக் குவித்து, உயர்ந்த ஏற்றின்மேல் ஏறியிருந்து பார்க்க, பொற்குவியலுக்கு அப்பாலிருப்பவரைக் காணாத அளவு பொன்னையுடையவன் ** கௌதன். (6. 30)

---

* 'குடையிட' என்றும் பாடம்.

** சிலப்பதிகாரத்தில், 'உத்தர கௌத்தற்கு' என்று அடியார்க்கு நல்லார் கொண்டுள்ள பாடமே சிறப்புடையதாகும்.

வணிகச் செல்வனது பொன்னைக் குவித்து, அரச யானைமேல் ஏறிப் பார்க்க அப்பால் இருப்பவர்களைப் காணாத அளவு பொன்னை யுடையவன் இப்பன். (6-31)

இத்தகைய மூன்று குலபதவியுள் திகழ்ந்த இப்பகுலத்தினன் சூரதத்தன் என்னும் வணிகன். (வசனம்)

ஈண்டு, இபத்தின் தொடர்புபற்றி இப்பன் என்றும், கௌவின் தொடர்பு பற்றிக் கௌதன் என்றும் பெயர் அமைந்திருத்தல் போன்று, ஏழகத்தின் தொடர்புபற்றி எள(ழ)கன் என்னும் பெயர் அமைந்துளது. ஏழகம் என்பது ஏடகம் என்னும் வடசொல்லின் திரிபாகும். இங்கு டகாரத்திற்கு ளகரம் வரும் என்று இலக்கணத்தில் விதி கூறப்பட்டுளது.

கன்னட ஜீவசம்போதனையில் **எளகன்** என்று கூறியிருக்கும் பெயர் அமைவுடையதாயுளது. அதனை நோக்கின், தமிழில் பெருங் குடிவாணிகர் என்றிருப்பது பெருங்கொறிவாணிகர் என்று இருந் திருக்கலாம் எனத் தோன்றுதல் கூடும். கொறி—செம்மறியாடு; தகர். பெரிய கொறியின் மேல் ஏறி நின்று குடையிடை நின்றால் ஒருவ ரொருவரைக் காண வொண்ணாத அளவு பொன்னையுடையவர் * **பெருங்கொறி** வாணிகர் என அவரிலக்கணம் பெறப்படும். அவ்வாறு கொள்ளின், பெருங்கொறி என்பது பெருங்குறி என்று திரிந்து பின்னர், பெருங்குடி என்று மருவியுளது எனல் வேண்டும். றகாரம் டகாரமாதல் உளது. குறுவாய் என்பது குடுவாய்=குடுவய் (குடுவை) என்று வழங்குதல் அறிக. இனி, பாட்டில் 'மிதியடியே றூனை' என்பதில் மிதியடி என்பதன் உண்மைப் பாடம் வேறுதல் வேண்டும்.

> 'மோத்தையும் தகரு முதளு மப்பரும்
> யாத்த வென்ப யாட்டின் கண்ணே' (மரபி-47)

என்னுஞ் சூத்திரத்தினால், தகரேயன்றி, மோத்தை, உதள், அப்பர் என்னும் பெயர்களும் யாட்டிற்கு உள.

என்பது அறியலாகும். இவற்றுள் உதள் எனப் பிரித்தலே முதள் என்று பிரித்தலும் நேரக் கூடியதே. தமிழ்ச் சீவ சம்போதனைச் செய்யுளில், 'மிதியடி' என்பது முதள் என்னுஞ் சொல்லினின்று மாறியதாகலாம் போலும் என ஐயம் எழுகின்றது. அவ்வாறிருப் பின் வணிகரின் மூன்று வகைப் பெயரும் ஒரு முறைமையின் அமைந்த தாகும்.

பெருங்குடி வாணிகர் என்னும் பெயரும் அவர்தம் இலக்கணமும் இனி ஆராய்தற்பால. ஏடுகளையும் நோக்குதல் வேண்டும்.

(தொடரும்)

---

* கன்னடத்தில், 'உயர்ந்த எளகத்தின் மேல்' என்று அடைமொழி கொடுத்திருப்பது காண்க.

வாழ்க்கைச் சிற்பம்

K. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L., தஞ்சை.

அறிதலு மறிதியோ அருருறு நெஞ்சமே!
மக்கள் வாழ்வே யிறைவனின் விளைநிலம்,
இறைவனை மகிழார் எவரும் மகிழார்,
அவனை ஒளித்தார் அனைத்தும் ஒளித்தார்,
சிந்தைக் கினிய சிறப்புடை யவனை
நினையாதவர்க் கிடங் கிடையா தெனலாம்,
அதுவே, முயலினைவிட்டு முடுகியே யோடும்
காக்கையைக் கருதும் கயவராம் செல்வர்
தம்மை யிவ்வுல கிகழ்தலை யுணரார்,
உலகமோ துயரினல் உவகை யில்லாது
பரதவிப் பதனைப் பல்லோ ரறிவர்,
உலகமோ விரிந்து எவர்க்கும் உதவும்,
இதனை, வாழ்க்கைச் சிறப்பு வாய்மையெனுது
இன்ப துன்பத் திடையலை கின்ற
மக்க ளின்மனம் மாசுடன் கலங்கும்,
அவர்களின் உள்ளம் அமைதிப் பொய்கை,
என்பதை யுணரா தேங்குவர் அவரே
ஆறுதன் அமைதியாம் நீர்ப்பெ ருக்கினை
கடலினிற் சேர்க்கக் கவலை யுருது
என்பதை எவரும் எளிதினி லறியார்
இலைகள் பழுத்து ஏகும் களிப்பினை
எவர்தான் உணர்ந்து ஏற்ற முற்றூர்!
பொறையுறு நிலனும் பொற்புறு வானும்
நிறையுடன் கண்டும் நீண்நில மக்கள்
பொறையுடன் கண்ணீர் போக்குத லறியார்
அழுகைத் துயரிலே பிறப்பும் இறப்பும்
இறப்பின் வித்து பிறப்பிலே யுளது
பிறப்பின் முளையும் இறப்பிலே யுளது
எதுவும் சாகா திருப்பது மில்லை
வாழ்வின் எழிலது இறப்பும் பிறப்பும்
இரண்டினுள் ஏற்றது இறப்பே யாயினும்,
இறப்பே பிறப்பென வியம்புதல் வேண்டும்
இம்மையில் மக்கள் இரண்டுதுன் படைவர்
ஒன்றே, விரும்பிய பொருளை அடைய வருந்தல்
இரண்டே, கிட்டிய பின்னர் எய்தும் துன்பம்,
இதனை யாய்ந்து வியற்கை யுலகின்
இன்ப துன்ப இருவழி யேகி
ஆனந்தமான ஆற்றெழுக் கினிலே

இறைவ னுடனே இரண்டறக் கலந்து
பூரணம் பெறுதல் பூதலர்க் குரித்து
எனவே, ஒன்றில் இரண்டை உவப்புடனுய்ந்து,
மூன்றை முற்றும் முடியவே நீக்கி
நான்கை நாமும் நாடுதல் வேண்டும்
அன்னை துயரில் அவதிப்படும் நாம்
நம்துயர் தன்னில் நாடியே செலாது
மெய்யறி வின்பம் விழைந்து சென்றேகுதல்
மக்கள் வாழ்வின் மணமுறு நிறைவே.

கையார்கணை சென்றதாற் கண்ணிற் றெரியக்காணேன்

பண்டித, சி. சுப்பிரமணியன்,
யாழ்ப்பாணத்து நெல்லியடி, அரசர் உயர்நிலைப்பள்ளி, இலங்கை.

இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்கட்கு முன்னர், அயோத்தியை ஆண்டு வந்தார் தசரதர். இவருக்குக் கோசலை, கைகேசி, சுமத்திரை என மூன்று மனைவியர் இருந்தனர். இருந்தும், நெடுங்காலமாக மகப் பேறின்றி வருந்தினர்.

வருந்தியவர், ஒரு தினம் காட்டில் வேட்டமாடப் புறப்பட்டார். புறப்பட்டு, வேட்டமாடிச் சிங்கம், புலி, கரடி முதலாங் கொடு விலங் கினங்களைக் கொன்று, கரி வேட்டமாடப் போய் ஓர் ஆற்றங்கரைக்குப் பக்கத்திலே பற்றை மறைவில் ஒளித்திருந்தார்.

அப்பொழுது, யானை தண்ணீர் குடிக்குஞ் சத்தம் கேட்டது' கேட்டதும், அச்சத்தத்தின் குறிவழியே நாணேற்றி அம்பொன்றை எய்தார்· எய்த அவ்வம்பானது குறிவழிச் சென்று, தண்ணீர் மொண்டு நின்ற அந்தணச் சிறுவன் மீது உருவவே, அவன் ஐயோ! வென்றலறி உதிரம் ஆருயப் பெருக அறிவு கெட்டு விழுந்து புரண்டான். அச்சத்தத்தைக் கேட்ட தசரதர் அச்சத்தங் கரிக் குரலன்று, மக்கட்குரலென்று உள்ளந்தனிலே யுன்னி அம்பும் வில்லும் நெகிழச் சிறுவன் அண்டை வந்தார். வந்தவர், தாம் ஆராயாமல் செய்த செயலுக்காகப் பெரிதும் வருந்திச் சிறுவனை நோக்கி மன்னிக்குமாறு வேண்டினர்.

அப்பொழுது, சிறுவன் தமக்கு நேர்ந்த அவ்வின்னல் மதியின லன்று விதியினுலேயே யெனவுட்கொண்டு அரசனை நோக்கி அரசே!

உம் மேலுங் குற்றமில்லை. எம் விதியே எம்மை இவ்வாறு சூழ்ந்து கொண்டது. நீவிர் வருந்த வேண்டா மெனக் கூறித் தம் வரலாறெல்லா முரைத்துக் கண்ணிழந்து கடும் தவம் புரியும் அன்னை தந்தையர்க்குத் தண்ணீர் கொடு போய் உதவித் தஞ்சாவு முரைத்து வணக்கமும் விளம்புமாறு பணித்துப் பூதவுடம்பு நீத்துப் புகழுடம் பெய்தி விண்ணக மெய்தினன்.

இங்கே, இஃதிவ்வாருக, நாழிகை பல வாகியும் வராத தம் மகனைக் குறித்து அருந்தவரிருவரும் புலம்பிக் கொண்டிருக்கும் வேளையில், தசரதர் தோளில் தாங்கிய நீர்க்கலயத்துடனும் சோர்ந்து பட்ட மனதுடனும் ஆரண்யத்தை அண்மினர். அண்மியதும், தம் மகனே யெனக் குறித்து இவ்வளவு நேரந் தாழ்த்த தென்னே? அருகே வாராய் மகனே என அழைத்தனர்.

அழைக்கத் தசரதர் மதிமயங்கி ஐயா! யான் ஓர் அரசன் அயோத்தி நகரத்துள்ளேன். கொடிய மிருகங்களை வேட்டமாட உன்னி மறைந்திருதேன்., பொய்யா வாய்மைப் புதல்வன் புனல் மொண்டிடும் ஓதையின் மேல் 'கையார் கணை சென்றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்.' எனக் கூறி முடித்து நின்றூர்.

அப்பொழுது அவ் வார்த்தையைக் கேட்ட அவ்விரு முதியவரும் வீழ்ந்தார், அயர்ந்தார், புரண்டார், விழி போயிற்றென்றூர், துன்பக் கடலுளாழ்ந்தார் ஐயா ஐயா வென்றூர். நெஞ்சைப் போழ்ந்தாய் என்றூர். பொன்னுடதனிற் போய் வாழ்ந்தேயிருப்பத் தரியேம் வந்தேம், வந்தேம், என்றூர்.

என்று புலம்பி அயரும் அருந்தவரைத் தசரதர் வணங்கி இனி யானே உம் புதல்வன் நீரேவும் பணி செய்திடுவன். ஒன்றிற்கும் தளர்வுற்றயரீர் இடரொழிமின், எனக் கூறி நின்றூர்.

நிற்க அருந்தவர் கண்ணுள் மணிபோல் மகவை யிழந்து உயிரைக் காதலித்து உண்ணு வெண்ணியிருந்தால் உலகோர் என்னென் றுரையார். விண்ணின்றலை சேருதும் எம்போல் விடலை பிரிய நீயும் தேவலோக மடைவாய் எனச் சாபம் அளித்து விண்ணக மெய்தினர்.

திருக்குறள் ஆராய்ச்சி

திரு. சூர். தேவதாஸ் அவர்கள், மதுரை

நான்காம் அதிகாரம்: அறன் வலியுறுத்தல்.

இராசத தாமதங்களானுய பொருளின்பங்களினும் சத்துவத் தானுய அறன் பண்பாற் சிறந்தது. வீடு பயத்தலால் அறன் பயனுனும் சிறந்தது. ஆதலின் இஃது அவற்றின் வலியுடைத்து. இறையவர் பதங்களும் அழிவில் வீடும் எய்துதற்குரிய மாந்தர்க்கு அறன்

ஒன்றே சாலும் என இதனையே ஆசிரியர் வலியுறுத்தார். தேவர்களும் பிரகிருதியின் நீங்கியவரல்லர். ஆதலின் மாந்தரும் தத்தம் குணங்கட் கேற்றவாறு அறம் பொருளின்பங்களுள் ஒன்றன் கண் கருத்தைச் செலுத்துவர்.

பொருளும் இன்பமுமாகிய ஆழிநீந்திக் கடக்கற்பால ; அறவாழி திளைத்து உறையற்பாற்று. ஆதலின் ஆசிரியர் எட்டாம் செய்யுட் கண் அறனை நன்று என்றார். வாழ்நாள் வழியடைக்க விரும்புவோர் கருதவேண்டுவது அறன் ஒன்றே.

துறவறத்தால் சிறப்பென்னும் வீடுபேறு உண்டாம். அது செய்கலாதார் இல்லறத்தின் கண்ணின்று ஆற்றின் ஒழுகிச் செல்வ மென்னும் துறக்கத்தையேனும் அடையவேண்டுமேயன்றி வாழ்நாளை அவாவுதல் நன்றன்று. ஆனல் வீடுபேற்றைத் தேட வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்து ஆதல் அறிக.

'அறத்தினூஉங் காக்கமுமில்லை' என மேற்சொல்லிய அதனையே இரண்டாம் செய்யுளில் ஆசிரியர் அனுவதித்தாரென உரையாசிரியர் கூறினுரேனும் அவர்க்கு அது கருத்தன்று. சிறப்பு, செல்வம் என்னும் பயனைக்காட்டி அறஞ்செய்யத் தூண்டிய ஆசிரியர் அதுவும் பயன் கருதிச்செய்வதாகும், அது சரியன்று எனக் காட்ட அறனே ஆக்கம் அதனை மறத்தலே கேடு என விதித்துளாரேயன்றி அனுவதித்தா ரல்லர்.

'மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்தறன்' என்பதற்கு மாசில னுதலே அறன் என்பாரும் உளராலோவெனின் அது சரியன்று. மாசிலான் செய்வதே அறன் மாசுளான் செய்வது அறம் போற்றேன் றினும் அறமாகாது ஆகுல நீர்த்து என்பது கருத்து.

அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் நான்கும் இரு அறத் தினுக்கும் பொதுவகையால் மாசாகுமேனும் சிறப்புவகையால் இல் வாழ்வானுக்கு அழுக்காறும் அவாவும் துறவறத்தானுக்கு வெகுளியும் இன்னுச்சொல்லும் மாசாதல் கொள்க.

மண்ணின்கண் சிவிகையூர்தல் அறத்தின் ஆருதல் ஒருதலை யன்று. தீநெறியானே பொருளீட்டியவனும் சிவிகை யூர்தல் கூடும். அறத்தின்ஆறு சிறப்பு செல்வமும் என்றவர் மண்மிசை சிவிகை யூர்தலைக் கூறினுரெனல் பொருந்தாது. துறவு முற்றியவன் பூமேல் நடக்கும் சிறப்பும் இல்லறத்தின் கண் வேள்வியாற்றிய இந்திரன் அப்பூந்தவிசைப் பொறுக்கும் செல்வமும் ஆகிய இருவகையறத்தின் ஆறும் இங்கு, கூறப்பட்டுள்ளது. கோதமன் நீத்தான் அல்லன் ஆதலின் பூமேல் நடக்கும் ஐந்தவித்தான் ஆற்றற்கு அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி என்பதும் உணரப்படும்.

மூன்றும் செய்யுட்கண் அறவினைக்கு இருவகை யறத்தினையும் உரையாசிரியர் எய்தக்கூறியவாறே ஒன்பதாம் செய்யுட் கண்ணும் கூறுக. இல்வாழ்வானுக்கும் துறவிக்கும் தன் தன் நிலைக்குத் தக்க

அறத்தைச் செய்வதால் வருவதே இன்பம்; காமநுகர்ச்சி முதலியவற்ருல் வருவன இன்பமாகா, புறத்த, புகழுடையனவும் அல்ல.

இல்லறத்திற்கு மிக்க பொருளும் துறவறத்திற்கு முதிர்வயதும் எய்திய 'அன்று அறிவாம் என்னுது அறஞ்செய்க.'

எது தமிழ் இலக்கியம்?

நாவலர், பேராசிரியர், திரு. ச. சோமசுந்தரபாரதியார் M.A. B.L., கரந்தைத் தமிழ்ப்பெருமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு.

புலவர்களே! இளைய நண்பர்களே!

இலக்கிய சம்பந்தமாகவே பேசிவந்த யான் பொதுக்கூட்டத்தில் பேசநேர்ந்தது இந்திப் போரிலேதான். இலக்கிய சம்பந்தமுடைய யான் பொதுமக்கள் ஏற்கும் வண்ணம் எவ்வாறு பேச முடியுமென எண்ணினேன். ஆனுல் நம்மக்களின் பழமையான பெருமையாலே நம் மக்கள் என் பேச்சை முற்றிலும் ஒத்துக்கொண்டார்கள். என் பேச்சு வன்மையாலல்ல; அவர்கள் முற்றிலும் ஒப்புக்கொண்டது அவர்கள் உள்ளத்தில் தமிழ்க்குருதி ஓடுவதாற்ருன். இலக்கியத்தைப்பற்றி என் கருத்தைச் சொல்லவும் கருத்துக்களை மாற்றிக்கொள்ளவும் முற்பட்டு இன்று பேசுகின்றேன். இலக்கணத்தைக் கூருமல் நல்ல தமிழ் இலக்கியத்துள் ஒன்றைச் சுட்டி வகுத்துக் காட்டலாம் அல்லது இலக்கியம் முழுவதையும் சுட்டி அவற்றினை வகுத்துக் காட்டலாம் எனும் இவற்றுள் பின்னதைக் குறித்து யான் பேசுகின்றேன். முதலாவதாக இலக்கியம் என்ற சொல் தமிழில் எப்படி வந்தது என்பதை ஆய்வாம். இலக்கியம் என்பது லக்ஷியம் என்ற வடசொல்லின் திரிபு என்பர். ஆங்கிலத்தில் முருங்கைமரம் என்ற சொல் வழங்குவது போலவும், தமிழில் கங்காரு என்ற சொல் வந்து வழங்குவது போலவும் இலக்கியம் என்ற சொல் இரவல் கொண்டதென்பர். இடைக்காலத்தில் தமிழர்கள் மானத்தை மறந்து ஆரிய மொழியில் இருந்தாற்ருன் பெருமை என எண்ணி, மக்கள் பெயர் முதல் மரப் பெயர் ஈருக உள்ள எல்லாப் பெயர்கட்கும் வடமொழிப் பெயர்களை இட்டு வழங்கலாயினர். லக்ஷியம் என்ற சொல்லிற்கு இரண்டுமொழியிலும் கொள்ளும் பொருள் போதாது. இலக்கியம் என்ற சொல் லக்ஷியம் என்ற சொல் குறிக்கும் பொருளையுணர்த்தாது. இலக்கியத்தைச் செய்யுளென்பர். பண்டைத் தமிழர். ஆங்கிலேயர் Literature என ஆங்கிலத்தில் சொல்வர். எழுதப்பட்டதெல்லாம் Literature தான் உதாரணமாக Literature about the horse etc., உரை, பாட்டு எவையாயினும் ஒரு பொருள்பற்றி விரித்தெழுதுமனைத்தையும் தமிழில் செய்யுள் என்பர். வடமொழியின் லக்ஷியம் என்ற சொற்பொருளை நோக்கின் செய்யுளின் பொருளோடு வேறுபடும். லக்ஷியம் என்ற சொற்கு நோக்கம் எனவும் பொருள் கொள்ளலாம்.

(தொடரும்)